திருக்குறள்.
மலர் 1. இதழ் 9
Sep 1928.

JL
RbT3m211/M128
M28·1·9.
187123

663

Registered No. M. 2330.

ஓம்

# சித்தாந்தம்

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "


| | | |
|---|---|---|
| மலர். க | விபவ ஆண்டு ஆவணித் திங்கள்<br>1928 ஆம் செப்டம்பர் மீ | இதழ். கூ |


உள்ளுறை — பக்கம்


| | | |
|---|---|---|
| சைவசித்தாந்தம் ... | ... பத்திராசிரியர் | ... 193 |
| நள்ளிரவில் நகர்க்காட்சி ... | ... வல்லை. பாலசுப்பிரமணியன் பீ. ஏ. | 197 |
| இராமலிங்க சுவாமி கல்விகற்ற வரலாறு. | பத்திராசிரியர் | 203 |
| சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம் | ... உதவிப் பத்திராசிரியர் | 209 |
| பதி பசு உண்மை ... | ... காழி. சிவ. கண்ணுசாமி. B. A. | 212 |
| சிவமணிகள் ... | ... சுவாமி இராமசுவாமி | 213 |
| செய்தித் திரட்டு ... | ... | 214 |
| வரவு செலவு கணக்கு ... | ... | 216 |



பத்திராசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்,

ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்

வித்துவான்

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்.



சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,

92, வாதா முத்தையப்பன் தெரு,

சென்னை.

1928

OFFICE ... 31 OCT 1928 MADRAS

ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் க | பிரபவ ஆண்டு ஆவணித் திங்கள்<br>1928 ௵ செப்டம்பர் ௴ | இதழ் ௯ |

## சைவ சித்தாந்தம்

[பத்திராசிரியர்]

### தோற்றுவாய்

சைவசித்தாந்தம் என்பது இன்னது என்றும் அதன்கண் உணர்த்தப்படும் உண்மைப் பொருள்கள் இன்னின்ன என்றும் அதற்கும் பிறசமயங்கட்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் இவ்விவை என்றும் அதன் பொது வியல்பு சிறப் பியல்புகள் இத்தகையன என்றும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இலக்கிய இலக்கணம் தமிழிலே கல்லாதவர்க்கும் சமயஞானம் பயிலப் பெறாதவர்க்கும் இனிது விளங்கும் வண்ணம் பரிபாஷைச் சொற்கள் பெரிதும் கலவாமல் தடை விடைகளை வேண்டிய அளவிற்கு அமைத்துக் கொண்டு இது முதல் எழுதி வருவேம்.

சைவசித்தாந்தம் என்னும் சொற்றொடரை முதற்கண் ஆராய்வோம். இது சைவம் - சித்தாந்தம் எனப் பிரிக்கப்படும். சைவம் என்பது சிவம் என்னுஞ் சொல்லின் அடியாகப் பிறந்த வடமொழித் தத்திதம். இதன் பொருள் சிவசம்பந்த முடையது என்பதாகும். சைவம் என்னும் மொழி சிவசம்பந்த முடைய சமயத்தையும் ஆகமங்களையும் உணர்த்தும். 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' என்றும் 'சைவ முதலாம் அளவில் சமயங்கள்' என்றும் 'இது சைவம் நிகழ்த்துமாறே' என்றும் வரும் ஆன்றோர் திருவாக்குக்களைக் காண்க. சைவம், வைணவம் எனவரும் உலக வழக்கிலும் சைவம் சமயத்தைக் காட்டல் அறிக.

இனிச் சித்தாந்தம் என்பது ஒரு சொன்னீர்மை யுடைய இரு சொற்களாலாய தொடர்மொழி. இது சித்தம்-அந்தம் எனப் பகுக்கப்பட்டு முடிந்த முடிபு என்னும் பொருளைப் பயக்கும். முடிந்த முடிபாகும் சிவாகமங்கள் சித்தாந்தம் என வழங்கப் பெறும். 'சிவாகமங்கள் சித்தாந்த மாகும்' என வரூஉம் சிவஞான சித்தியார் திருவாக்கைக் காண்க. இது 'சித்தாந்த வீதிவரும் [illegible] தேவே

பராபரமே’ என்றும் ‘சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்தி’ என்றும் ‘தானென்னும் வேதாந்தம் தானான சித்தாந்தம்’ என்றும் வரும் வழக்குக்களால் சமயத்தை உணர்த்தலும் கொள்ளப்படும்.

எனவே சைவ சித்தாந்தம் என்பது சைவத்தினது முடிந்த முடிபு என்றும் சிவாகமங்க ளாகிய முடிந்த முடிபுகள் என்றும் சிவ சம்பந்த முடைய முடிந்த முடிபாகிய ஆகமங்கள் என்றும் பல பொருள்படுதலும், சைவ மாகிய சித்தாந்த மென ஒரு பொருள் படுதலும் தெளியப்படும். உலக வழக்கிலே பெரும்பாலும் சைவம் சமயாசாரம், கிரியை முதலியவற்றையும் சித்தாந்தம் தத்துவஞானப் பகுதியையும் புலப் படுத்தல் தெளிவாம்.

இனி, இச்சொற்றொடர் எப்பொழுது முதன்முதல் யாரால் வழங்கப்பட்ட தெனச் சிறிது நோக்குவோம். இவ் வுண்மையினை ஆராய்ந்த அறிஞர் சிலர், ‘வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறன்’ என்னும் உமாபதி சிவனார் திருவாக்கை எடுத்துக் காட்டிச் ‘சைவ சித்தாந்தம்’ என்பது முதன் முதல் உமாபதி சிவனாராலேயே உரைக் கப்பட்ட தென்றும், அதனால் அஃது இற்றைக்குச் சிறிது ஏறத்தாழ அறு நூறு ஆண்டுகட்கு முற்பட்டதே என் றும் முடித்தார். இது பொருந்தாது. ஏனெனில், உமாபதி சிவனாருக்கு ஏறக் குறைய நானூறு ஆண்டுகட்கு அஃதா வது இற்றைக்கு ஓராயிரம் ஆண்டு கட்கு முன்னரே விளங்கிய அற்புத ஞான வைராக்கிய நற்றவச் செல்வ ராகிய பட்டினத்துப் பிள்ளையாரால் ‘சைவ[illegible]ல் ஆகமம்’ என[illegible]மையால் என்க. இனி, இச்சொற்றொடர் காணப் படும் பாட்டு, பட்டினத்தடிகள் இயற் றியதன்று இடைச்செருகல் என்றும் கூறுவாரும் உளர். அவர் அதற்குக் கூறும் காரணம் மென்மை யுடையதாத லின் அது கொள்ளற் பாலதன்று.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே சைவசித்தாந்தம் என்னுஞ் சொற் றொடர் செய்யுள் வழக்கில் ஏறியதெனக் கூறியதால் சைவசித்தாந்தமே அப் பொழுதுதான் தோன்றிற்று எனக் கொள்ளற்க. சைவசமயம் எக்காலத்தே தோன்றிற்று என வரம்பிட்டுக் கூற எவராலும் இயலாது. அதனானே அது அநாதியான சமயம் எனப் பெரியோ ரான் புகழ்ந் துரைக்கப்பட் டுள்ளது. சைவம் என்னும் வழக்கும் சிவாகமங் களும் தோன்றிய காலம் இன்ன தென அங்ஙனமே கூற இயலாது. சிவாகமங் கள் சிவபெருமானால் திருவாய் மலர்ந் தருளப்பட்டன என்பது சைவர் கொள்கை.

இனிச் சைவர் பிரமாண மாகக் கொள்ளும் நூல்களைத் தெளிந்து கொள்ளல் வேண்டும். இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் வடமொழி நான்மறைகள் சைவருக்கு உடன் பாடே. இந்நான் மறைகளையும் சைவர் தமது பிரமாண நூல்களில் பொது வெனக் கொள்வர். சிவாகமங்களையே தமக்குச் சிறப்புப் பிரமாணமாக ஏற் றுக் கொள்வர். வேதத்திலே சூரி யன், வருணன், வாயு, மித்திரன், பிர மன், விஷ்ணு முதலான பல தேவ வழி பாடுகள் காணப்படுவதால் அது பொதுப் பிரமாணமாகச் சைவராற் கருதப்பட் டது. சிவாகமங்கள் அவ்வாறின்றிச் சிவ பெருமான் ஒருவருக்கே சிறப்பாக இருத்தலால் அவை சைவருக்குச் சிறப்

18723



புப் பிரமாண நூல்களாயின. சிவாகமங் களுக்கும் வேதத்திற்கும் முரண் காணப்படின் சிவாகமப் பொருளையே சைவர் கொள்வர். இதனாற் சைவசித் தாந்தம் ஆகமாந்தம் என்னும் ஒரு பெயரையும் பெற்று வழங்கும்.

இனி, வேதம் ஒரு சாராரால் தனக் குத் தானே பிரமாணம் என்றும் ஒரு புருஷனால் செய்யப்படாத அபௌரு ஷேயம் என்றும் கருதப்படும். சைவரும் பிறரும் அது கடவுளால் அருளிச் செய் யப்பட்டதெனக் கொள்வர். வேதமும் இன்ன காலத்தே உதித்தது என அறி யப்படாமையான், அநாதி எனக் கூறப் பெறும். பண்டைக் காலத்திலேயே வேதத்தைப் பிரமாண மாகக் கொண்ட ஒரு சிலர் சிவாகமங்களைப் பிரமாண நூல்களாக ஒப்புக் கொள்ளாது மறுத் துள்ள செய்திகள் நூல்களில் காணப் படுகின்றன. அவ்வழக்கு இன்றும் முற் றும் ஒழிந்ததெனக் கூற முடியாது.

பிற்காலத்தே வியாசர் அருளிய பிரம்ம சூத்திரத்துக்கு முதன்முதல் பிரமாண சகிதம் உரைகண்ட ஆசிரியர் நீலகண்ட சிவாசாரியர் தமது பாஷ்யத்திலே இப் பொருளை எடுத்துக்கொண்டு வேதமும் ஆகமமும் தம்முள் ஒருமையுற்று நடத் தலை நன்கு விளக்கினர். பின்னர்த் திரு மூல யோகிகள்,

‘வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக
நாத னுரையிவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே’

என்னும் திருமந்திரத்தால் வேதம் ஆகமம் என்னும் இரண்டும் உண்மை நூல்கள் என்றும் அவற்றுள் வேதம் பொது நூலும் ஆகமம் சிறப்பு நூலும் ஆகக் கொள்ளப்படு மென்றும் இவ் விரண்டுக்கும் பரமாசாரியன் சிவபெரு மானே என்றும் அவை தம்முள் பேத மில்லை என்றும் உண்மை தெளிந்த பெரியோருக்கு அவை அபேதமாக விளங்குகின்றன என்றும் தெளித் துரைப்பா ராயினர்.

இனிச் சைவர், வேதம் கன்ம காண் டம் ஞான காண்டம் என இருவகை யாகக் காணப்படுதலின் அது யாவருக் கும் பொதுவாகப் பயன்படும்படி அரு ளிச் செய்யப்பட்ட தென்றும் சிவாகமம் திருவருளைப் பெற்ற அதிதீவிர பக்குவ முடையார்க்கு அருளிச் செய்யப்பட்ட தென்றும் கொள்வர். ஆகமங்களிலும் ஆகமம் என்னும் பெயரை உடைய எல்லா ஆகமங்களும் சைவருக்குப் பிரமாண மாகா. நூற்றெட்டுச் சிவாக மங்களையே சைவர் பிரமாண மாகக் கொள்வர். இவைகளே திவ்யாகமங்கள் எனப்படும். இவ்வுண்மை சைவ நூல் கள் எல்லாவற்றிலும் முழங்கும். ‘ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க’ ‘வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே’ என வரும் தித்திக்கும் திருவாசகத்தின் திப்பிய மொழிகளை நோக்குக.

இனி, ஒவ்வொரு வேதத்திற்கும் இறுதியிலே சிற்சில உபநிடதங்கள் காணப்படுகின்றன. இவைகளே ஞானத் தைக் கூறுகின்றன. ஆதலால் இவை ஞான காண்டம் என்றும் ஒவ்வொரு வேதத்தின் அந்தத்திலும் இருப்ப தால் வேதாந்தம் என்றும் வழங்கப் பெறும். கன்மத்தையே கூறும் வேதத் தின் முற்பகுதியினும் ஞானத்தைக் கூறும் வேதப் பிற்பகுதியாக உபநிட தங்கள் சிறந்தன. ஆதலால் அவை கட்கு வேதாந்தம் என்னும் சிறப்புப்

18/123.

பெயர் வழங்கும். அவ்வுபநிடதங்களைக் காட்டினும் திவ்விய சிவஞானத்தை உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெள்ளிதின் உணர்த்தும் சிவாகமங்கள் சிறந்தவை.

இக் காரணம் பற்றிச் சிவாகமங்கள் வேதாந்த தரமெனக் கூறப்படும்.

இனி வேதாந்தம் என வரும் இடங்களிலெல்லாம் அஃது உபநிடதங்களைக் குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும். வேதாந்தம் எல்லார்க்கும் பொது. அஃது ஒருவருக்கு மட்டும் சிறப்பன்று. வேதாந்திகளென வைணவரும் கூறுவர்; சைவரும் 'வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தம்' என்றும், 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை' என்றும்,

'ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்துஅதன்
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே'

என்றும் ஆங்காங்கு முழக்குதல் காண்க. ஆனால் உலக வழக்கிலே ஏகான்ம வாதிகளே தம்மை வேதாந்திகளெனவும் அத்துவிதிகள் எனவும் வழங்கி வருகின்றனர். அத்துவிதம் என்னும் சொல்லும் வேதாந்தம் என்பதைப் போலவே பொது மொழியாம். சைவரும் அத்துவிதிகளே. அவர் தம்மைச் சுத்தாத்துவிதிகள் என்பர். வைணவர் தம்மை விசிஷ்டாத்வைதிகள் என வழங்குவர். சைவர், வைணவர் என்னும் பெயர்கள் இவ்விருவருக்கும் வழங்குதலாலும் சைவருக்குச் சித்தாந்திகள் என வேறொரு சிறப்புப் பெயர் வழங்குதலாலும் அவர்கட்குப் பொதுப் பெயர் உலக வழக்கிலே அருகி வழங்க லாயிற்றென அறிக. இப்பெயரால் குழப்பம் ஏற்படுதலால் இதனை ஈண்டு விளக்கினேம்.

உபநிடதங்கள் யாவர்க்கும் பொதுவாதல் பற்றி அவைகட்குப் பலர் தந்தங் கொள்கைகட்கு ஏற்றவாறு வலிந்தும் நலிந்தும் பொருள் கொண்டு நூல் செய்துள்ளார். அவற்றுள் சைவசித்தாந்த உரைகளையே நாம் பிரமாணமாகக் கொள்ளல் வேண்டும். ஓர் ஒழுங்கின்றிப் பொற்றுகள் போல ஆங்காங்குச் சிதறுண்டு கிடக்கும் உபநிடத ஞானப் பொருள்களை எல்லாம் ஒரு முறை செய்து ஒன்றுபடத் திரட்டி உருக்கி வார்த்த பொற்பிழம்பு போல் வது வியாச முனிவர் அருளிச் செய்த பிரம்ம சூத்திரம். இதுவும் யாவர்க்கும் பொது. இதற்கும் பலர் உரை கண்டனர். சங்கராசாரியார் ஏகான்மவாதம் பற்றியும் இராமநுஜர் விசிஷ்டாத்துவிதம் பற்றியும் மாத்துவர் துவிதம் பற்றியும் உரை செய்துள்ளார். ஆசிரியர் நீலகண்டனார் சைவபரமாக உரை கண்டார். இவ்வுரையே நாம் கொள்ளத் தக்கது. இவ்வுரையும் சைவசித்தாந்தத்தோடு பெரிதும் ஒத்துச் சிறிது ஒவ்வாமல் நடப்பது. ஏனெனில் சைவ சித்தாந்தத்தின் உட்பகுதி யாகிய ஒரு பிரிவையே தழுவியது இவ்வுரை என்க.

இனி ஆகமங்களிலேயும் சிற்சில வேற்றுமைகள் கல்பபேதம் பற்றி உண்டு. அவற்றுள் சில வாக்கியங்கள் ஒன்றற்கொன்று முரணுவன போலவும் காணப்படும். அன்றியும் வேதத்திற்கும் ஆகமத்திற்கும் உள்ள ஒற்றுமை நயத்தையும் இனிது விளக்கி யாரும் காட்டிற்றிலர். மேலும் அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளையும் புலங்கொள விளங்க வைத்தார் ஒருவருமிலர். அத்தகைய அரும்பெரும் திறப்பணியை ஆற்றுதற்குத் தமிழ்த் திரு



நாடும் சைவப் பெரு நாடும் செய்த தவப் பயனாகத் திரு வெண்ணெய் நல்லூரிலே வேளாளர் நன்மரபாகிய திருப்பாற் கடலிலே சொற்சூழலில் கவிந்து கொண்டிருந்த இருள் ஒழிய உண்மைஞான ஒளிக்கதிர்களைப் பரப்பி ஞான சூரியன் போல எழுந்தனர் நமது மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகள். இத் தெய்விகப் பேரறிஞரே வேதத்துக்கும் ஆகமத்துக்கும் உள்ள ஒற்றுமையினை உணர்த்தித் தெரித்தோதிய செல்வர். இவரே சிவாகமங்களின் முரணை அறுத்து அரண் வகுத்த நுண்மதியாளர். இவரே அத்துவிதத்தின் மெய்ப் பொருள் தெளிந்து எம்மை உய்யக்கொண்ட மெய்கண்ட தேவர். இவரே சைவருக்குச் சித்தாந்த பரமாசாரியர். இவர் திருவாய்மலர்ந் தருளிய சிவஞான போதமே சைவ சித்தாந்த முதனூல். இதுவே சைவ சித்தாந்தப் பரமப் பிரமாண நூல்.

இங்கு நாம் சைவருக்கு ஓர் எச்சரிக்கை செய்ய வேண்டும். அஃதாவது இத்தகைய சிவஞான போதம் வெளிப்படையாக ஐயமின்றிச் சைவ சித்தாந்தத்தை எடுத்து விளக்கும் பெருநூலாதல் அறிந்து வைத்தும் இதன் ஒப்பற்ற பெருமையை நோக்கிய பிற சமயத்தார் ஒருவர் சைவரை வஞ்சிக்கும் பொருட்டு இதற்குத் தமது சமயத்துக்கு ஒற்றுமை யாகச் சொற்களை ஈர்த்து வலிந்து பொருள் செய்த ஒருரை நூல் வெளிவந்துளது. இதனைச் சைவ சித்தாந்திகள் உணர வேண்டும். இவ்வாறே சிவப்பிரகாசத்துக்கும் அவ்வாறுய உரை உண்டு. சிவஞான சித்தியாருக்கு உள்ள ஞானப்பிரகாச முனிவர் உரையும் சைவத்தின் உட்பிரிவு ஒன்றைப் பற்றிச் செல்வதே. இவற்றால் சைவ சித்தாந்திகள் தமது நூல்கள் இன்னின்ன எனத் தெரிந்து கொள்வதோடு அமையாமல் அவற்றின் உரைகளினும் தம்முடைய வற்றைத் தேடித் தெளியவேண்டியவர்களாக உள்ளார்கள் என்பதை அறிவுறுத்துகின்றோம்.

இதுகாறும் சைவசித்தாந்தம் என்னும் தொடர் மொழியைப் பற்றியும் சைவர் பிரமாண நூல்கள் இவ்விவை என்பதைப் பற்றியும் சிறிது கூறினோம். இனிவரும் கட்டுரைகளிலே சைவ சித்தாந்தத்திலே கூறப்படும் பதி பசு பாச உண்மை இயல்புகளைப் பற்றி எழுதுவோம்.

---

# நள்ளிரவில் நகர்க்காட்சி

[வல்லை. பாலசுப்பிரமணியன், பீ. ஏ.]

இரவு - நள்ளிரவு - காரிருள் - பேர் அந்தகாரம். இந்நில வுருண்டை தோன்றிய நாள்தொட்டு இன்றுகாறும், இவ்வுலகில் வதியும் கயவர்கள், தொழுநோயாளர்கள், வஞ்சகர்கள், நம்பிக்கைத் துரோகஞ் செய்தவர்கள் என்னும் விரும்பத் தகாத இவர்களெல்லாம் நினைத்த எண்ணங்களும், கேடுசூழும் செய்கைகளும் ஒன்றாகத் திரண்டு, மட்டடங்காது பெருக்கெடுத்துக் கரிய வெள்ளமாய் இந்நகரிற் பாய்ந்ததோ வென்னும்படி இருட்படலங்கள் கொண்டல் கொண்டலாக இந்நேரத்தில் இந்நகரைக் கவிந்து கொண்

களில் எத்தனை இருந்தன? அந்நகரங்களின் மக்களிடை எவ்வளவு கட்டுக்கடங்கா வெற்றியும், மட்டடங்கா மகிழ்ச்சியும் வீறு கொண்டு தாண்டவமாடின. இந்நகரத்து மக்களைப் போன்றே அந்நகரங்களின் மக்களும் நிலையல்லவற்றை நிலையென்று பிறழ நினைத்து, தாம் என்றும் ஓரே நிலையிலிருக்கப் போவதாக நம்பி மோசம் போனார்கள். சிலவற்றின் அடிச்சுவடும் இக்காலத்தில் காண முடியவில்லை. ஆ! அவற்றைப் பற்றிய நினைவெல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போய்விட்டன. உலகத்தின் பெரும்பகுதிகளான முப்பெருங்கண்டங்களில் தன் கால்களை ஆழ்ந்து நாட்டி ஏகாதிபத்தியம் செலுத்தியதும், ஆயிரம் ஆயிரமாகத் திக்கற்ற ஏழை அடிமைகளைக் காரணமின்றியே, தசைகள் கொத்துக் கொத்தாய் அறுந்து விழவும், செங்குருதி ஊற்றெடுத்துப் பொங்கவும், சாட்டையால் வெற்றுடம்பில் அடித்து வேலை வாங்கிப் பிரம்மாண்டமாய்க் கட்டப்பட்ட ரோம் நகரத்தின் சீரும், செல்வாக்கும் இஞ்ஞான்று எங்கே? பாழும் எதிரொலி "எங்கே" என்று பதிலிறுக்கின்றது. அன்றியும், பன்னெடு நாட்கள் பட்டினியாகக் கிடந்த கொடிய சிங்கங்களோடும் தீவாய் வேங்கைகளோடும், அந்தோ! ஏழை அடிமை மக்களை நிராயுதபாணிகளாய்ப் போராடச் செய்து, அவ்விலங்குகள் இம்மக்களைக் கை வேறு, கால் வேறாய்ப் பிய்த்தெறிந்து குருதியைப் பருகும்போது, அதைக் கண்டு கண்களில் மகிழ்ச்சி பொங்கக் கரங்கொட்டி ஆர்ப்பரித்து வெறியாட்டயர்ந்த ரோம் நகரத்து முடி சார்ந்த மன்னரும், மற்றுமுள்ளோரும் என்னாயினர்? முடிவில் ஒரு பிடிசாம்பராய் வெந்து மண்ணாயினர். நம்மிந்திய நாட்டிலும் ஏழேழ் தலை முறைகளாக ஏகாதிபத்தியம் நடாத்திய மொகலாய அரசாங்கமும், மிகவும் வீறுபெற்று விளங்கிய விஜய நகர அரசாங்கமும் இறுதியில் கான் முளைகள்கூட அற்று, இருந்த இடமும் தெரியாமல் வீழ்ந்தொழிந்தன. நாம் இந்நேரத்தில் இந்நகரத்தின் சாக்காட்டிடையே தனிமையாக நடத்தல் போன்று, மேற்சொன்ன நகரங்கள் இடிந்து விழுந்த மண்மேடுகளில் பின்னொருகால் ஒரு வழிப்போக்கன் சோகமளாவிய மனத்தினனாய்த் தள்ளாடி நடக்குந்தோறும் இம்மண்ணுலகத்தின் நிலையாமையைத் தெள்ளிதின் உணர்ந்து உய்தி யடைகிறான்.

"இங்கே - இங்கேதான் அந்நகரத்தின் வாயிற் கோபுரம் வானுற வோங்கி வளர்ந்திருந்தது; இஞ்ஞான்று அது சாய்ந்து வீழ்ந்த மண்மேட்டில் வெள்ளெருக்கும், பாதாள மூலியும், முட்செடிகளும் விரைந்து படர்கின்றன. ஆ; அங்கே - அங்கேதான், அந்நகரத்தாருடைய பாராளும் மன்றம் அழகுபெற நிறுவப் பெற்றிருந்தது. இப்போது அவ்விடம் விஷப் பூச்சிகளும், கொடிய பாம்புகளும் தம் செழுங்கிளை தழீஇ உகந்து வாழும் இடமாக மாறியிருக்கின்றது. அவர்களது கோயில்களும், நாடக அரங்குகளும் இவண் இருந்தன; இப்போது அவைகள் இருந்த சிறு அடையாளமுங்கூட அவ்விடத்தில் இல்லை. பேராசைக்கும், வீண் ஆடம்பரத்திற்கும், இரையாகி அம்மக்கள் வீழ்ந்தொழிந்தார்கள். அரசாங்கத்துப் பரிசில்களும், பட்டங்களும், ஆதரவும் அவைகளை யடையத்



தகுதியுடையோர்க்குக் கொடுக்கப்படாமல், காலத்திற் கேற்ற தாளம்போட்டு, பல்லை இளித்துக் காட்டும் பகல் வேடச் சோம்பேறிகளுக்கு வழங்கப் பட்டன. அவர்கள் பசியெடுத்து உண்ணாமல் உண்பதற் கென்றே உண்டார்கள். உடம்பை மறைத்தற்கு உடுக்காமல், உடுப்பதற்கென்றே, பெருஞ்சுமையான ஆடையையும் அணிகலன்களையுஞ் சுமந்தார்கள். இவர்களது செல்வமும் ஆரவாரமும், மாற்றரசர்களை வாவென்று கூவி யழைத்தன. அவர்களும் வந்தார்கள். இவர்கள் கொற்றத்தைக் குலைத்தார்கள். இறுதியில் நீரிற்குமிழி வெடித்தது. இந்த வனாந்தரத்தில் முன் இருந்த அந்நகரத்தைக் காணோமே, அந்தோ, அவலம், அவலம்" என்று அவ்வழிப்போக்கன் முணு முணுத்துக் கொண்டே தன் வினையை நொந்து வீதியெண்ணிச் செல்கிறான்.

ஆனால் புழுதி படிந்த நடுத்தெருவினையே பஞ்சணையாகவும், நீலவானத்தையே தமக்குக் கூரையாகவும் கொண்டுள்ள மக்கள் யாவரென்று நினைக்கின்றீர்கள். இவர்கள் தாம் முகமறியாதவர்களும், நிலைத்த ஓரிடமின்றித் திரியும் நாடோடிகளும், பெற்றோரற்ற பிள்ளைகளு மாவர். மலை போன்ற மதக்களிறு தான் வாங்குங் கவளத்து ஒரு சிறிது வாய் தப்புமா என்று ஒரு கோடி எறும்புகள் பரபரப்புடன் திரிவது போன்று, பிரபுக்கள் என்போர் கடை வாயிலில், எச்சிலைக்கும், கந்தைத் துணிக்கும் ஏக்கற்று மேற்சொல்லிய அநாதைகள் ஏங்கி நிற்கின்றார்கள். இனி அவர்கள் கரையேற்ற முடியாதபடி அத்துணை ஆழ்ந்த துயரத்தில் மூழ்கி விட்டார்கள். அவர்களது கோரக் காட்சியைக் கண்டு வாசா கைங்கரியமாகவுங் கூடப் பரிதாபங் காட்ட முடியவில்லை. புற அங்கங்களை மறைத்தற்கு ஒரு சிறு கந்தைத் துணியும் இல்லாத அவர்களது நிர்வாணமும், அண்மினோரை அணுகவொட்டாத துர்நாற்றம் வீசி, அங்கமெல்லாம் குறைந்தழுகும் அவர்கள் தொழுநோயும், காண்போர் மனத்தில் அநுதாபம் எழுவித்தலையொழித்துப் பயங்கரத்தை எழுப்புகின்றன. மன்பதை அவர்களைத் தம்மவருள் ஒருவராக ஏற்றுக் கொள்ளாது புறக்கணித்து விட்டது. மக்கட் சமூகம் அவர்களைப் பற்றிப் பராமுகமாயிருக்கின்றது. இறுதியில் இவ்வேழை மக்கள் எய்தியது வெற்றுடம்பும், கொடும்பசியுமே யாகும்.

அரைக்கும் ஆடை யின்றிப் புழுதியில் புரளும் இவ்வேழைப் பெண் மக்கள், முன்னொரு நாள் நல்ல சுகத்திலிருந்தார்கள். அழகிகள், அணங்குகள், ஆயிழைகள் என இவ்வாறெல்லாம் இவர்கட்கு முகமனுரைகள் வழங்கப்பட்டன. ஒரு தூர்த்தனது காம இச்சைக்கு இவர்களது அழகிய உடம்பு இரை யாக்கப்பட்டது. இனி, இவர்களது வெற்றுடம்பு பயன் தராது என்று அறிந்தவுடன் அவ்வெற்றுடம்புடனே, பைந்தளிர் போன்ற மேனி நடுக்குறும்படி கார்காலத்துக் கடுங்குளிரில் அவர்கள் வெளியே தள்ளப் பட்டார்கள். நம்பினோரை நடுக்கடலில் விட்ட அவ் வஞ்சகக் கயவாது கடைவாயிலண்டை நாய்போற் படுத்து, அவர்கள் போவார் வருவார்க்குத் தம் எளிய நிலையைச் சொல்லி யழுதார்கள். சிலருக்கு இவர்களது கூக்குரல் செவியிற் புகவே யில்லை. இம்மட்டோடு நின்றால் சாலுமே. ஆ, வேறு சிலர் இவர்களது கண்ணீரைத் துடைத்

டன. முகத்தினெதிரே எம் கரங்களைத் தூக்கிப் பிடித்தும், அவைகள் எம் நோக்குகட்குப் புலனாக வில்லையென்றால், இவ்விருளின் திண்மையினை அன்பர்கள் மனத்தினால் ஊகித்தறிய விடுவதன்றி, இவ்வண்ணம் என்று யாம் எவ்வாறு எழுதிக் காட்ட வியலும். ஆணவ வல்லிருளால் மறைக்கப்படாத பெருந்தகையோர் உள்ளம் போன்று இங்கு மங்கும், இந்நகரத்து முதன்மையான வியாபாரக் கூட்டத்தாரது கட்டிடத்தின் வானளாவிய சிகரமும், அரசாங்கத்தாரது கோட்டைக் கொடிமரமும், இவ்வூர்ச் சிவன்கோயில் கோபுரமும், முனிஸிபல் கட்டிடத்தின் கடிகாரத் தூபியும் சிறிது மங்கலாக விளங்கிக் கொண்டிருந்தன. நகரத்தை அந்தகாரத்தில் ஆழ்த்தியிருந்த இவ்விருள் வெள்ளம், மேற் காட்டியவற்றின் உயரத்திற்கு எழ வில்லைபோல் தோன்றிற்று.

ஆம்; இந்நகர வாசியாகிய யாம், படுத்துத் துயில் கொள்ளும் அறை மிகச்சிறிதாய், வேனிற்கால வெப்பத்தினால் தூய காற்று போக்கு வரவின்றிப் புழுக்கமாய் இருந்தபடியால், சற்றுத் தூற்றுங் காற்றில் திளைப்பான் வேண்டி, துயிலைத் துறந்து, வீட்டை விடுத்து கழுதும் கண்படுக்கும் இந்நள்ளிராப் போதில் இந்நகரத்தின் அழகிய பரந்த தெருக்களின் ஊடே தனிமையாக நடக்கலாயினேம். எங்கணும் அமைதி - நீண்ட அமைதி - குடிகொண்டிருக்கின்றது. மேற்சொல்லிப் போந்த முனிசிபல் கட்டிடத்தின் மேற் பொருந்தப் பெற்ற பிரம்மாண்டமான நான்கு கடிகாரங்கள் ஒரே நேரத்தில் "டாஅங், டாஅங்" என்று இரண்டடிக்கின்றன. இவ்வோசையோடு, எங்கேயோ நாய் ஒன்று குரைக்கும் குரலும் கோயில் கொடி மரத்தில் கட்டித் தூங்கும் சிறு மணிகள் மெல்லிய பூங்காற்றினால் அலைக்கப்படுவதால் உண்டாகும் கிணு கிணு வென்னும் சிற்றோசையும், நகர்க்காவல் கடமை பூண்ட சேவகன் அவிந்து போகுந் தறுவாயிலிருக்கும் இராந்தல் விளக்கை ஏந்திய கையனாய், தள்ளாடித் தூங்கி விழுந்துகொண்டே "ஓஹய், யா அராங்கே" என்று போடும் ஒலியும் தவிர, வேறொன்றும் அந்நள்ளிரவில் கேட்கப்பட வில்லை. இச்சிற்றொலிகள் இவ்விராப்போதில் இந்நகரில் சூழ்ந்திருக்கும் அமைதியின் பெருமையினை, தம் புன்மையினால் எடுத்துக் காட்டினவே யொழிய, அப்பேரமைதியைக் கலைக்க ஆற்றலில வாயின.

ஆ! எம்மைச் சுற்றிலும் எத்துணைப் பேரிருள் இந்நகரைக் கவிந்து கொண்டது. வீடுகளில் வைத்திருக்கும் விளக்குக் கலங்களிலுள்ள எண்ணெய் ஏறக்குறைய முழுதும் எரிந்து விட்டபடியால், அனற் கொழுந்துகள் அவியுந் தறுவாயில் தம் நாவை நீட்டிச் சரேலென ஒளியைக் கான்று அவிகின்றன. பகற்பொழுதெல்லாம் நன்றாய்க் கரவாது உழைத்தவர்களும், சலனமின்றி அமைதி நிலவும் மனத்தினோரும் இந்நள்ளிராப்போதில் சுகமே கண்ணயர்கின்றனர். எண்ணாதன எண்ணி நெஞ்சம் புண்ணுவோர்களும், குற்றக் கொள்கலமான மாக்களும், இழிதுறை நண்ணுவோர்களும், நம்பி நட்டாற்றில் விடப்பட்டோர்களும் மொட்டு மொட்டென்று இவ்விரவிலுங்கூட விழித்துக் கொண்டிருக்கின்றனர். குடி வெறியன், மீண்டும் ஒரு முறை உயிரைப் பையப் பையக் கொள்ளை கொள்ளும் மதுபானத்தால் தன்னெதிரிலிருக்கும் கலத்தை நிரப்புகிறான். பிறர் பொருளை



தன்னதாய்ப் பாவிக்கும் கள்ளன் வழக்கம்போல் தன் இராச்செலவைத் தொடங்கி விட்டான். மீளாத்துக்கத்திலாழ்ந்து, உலகத்தாரால் வெறுத்தொதுக்கப்பட்டுத் தனது பாழும் வெற்றுடம்பு மிகையென்று கருதிய ஏழை, "அந்தோ! ஞாயிறு எஞ்ஞான்று படுவான்; இரவு எப்போது வரும்" என்று காத்திருந்தானாகையால். இவ்விரவில் நஞ்சொழுகும் வாளைக் கையிலேந்தித் தன் கழுத்தருகில் மெதுவாகக் கொண்டு போகிறான். பகலெல்லாம் ஆடம்பரத்தாலும், ஆடைகளாலும், செல்வத்தாலும் மூடி மறைக்கப்பட்ட மக்களது மன அழுக்கும், பேய் நீர்மையும், விலங்குத் தன்மையும், இராப்போதில் சுயராஜ்யம் கொடுக்கப்பட்டது போல் தலை விரித்தாடுகின்றன என்று முடிவாகக் கழறலாம். "ஆண்டவன் நல்லருள் வழங்கியும், அவன் செந்நெறி விடுத்து இழிதுறை நண்ணும் மக்களது புன்மதி இருந்தவாறு என்னே என்னே!" என்று வியப்புற்றுத் தம்முள் ஒன்றோடொன்று கண் சிமிட்டி இரகசியம் பேசுவனபோல், வான் மண்டிலத்துள்ள எண்ணிறந்த விண் மீன்கள் பரபரப்புடன் மின்னிக் கொண்டிருந்தன. இச்சிறு மின்னொளி, இந் நகரைக் கவிந்து கொண்டிருக்கும் திண்ணிய இருட்குழம்பின் கொற்றத்தைக் குலைக்க மாட்டாது, தன் புன்மையால், இருளின் பருமையை விளக்கிக் காட்டியது.

இனி, இந்நள்ளிரவில் தனிமையாக உலாப்போதருகின்ற எம்முடைய கடமை யாது? இவ்வுலகின் பண்டைப் பெருமைகளை யாதல், நிகழ்ச்சிகளை யாதல், அன்றி, எம்மைச் சுற்றிலும் நிகழும் தற்கால நிகழ்ச்சிகளை யாதல் நினைந்து, அருமையாகக் கிடைத்த இச்சிறு பொழுதை வறிதே கழிக்க எண்ணினோமில்லை. சில மணி நேரத்திற்கு முன்புதான் வெற்றாடம்பரம், வீண் ஆரவாரம், வெளிப்பகட்டு என்னும் இன்னோரன்ன பல பெயர்கள் தாங்கிய மடந்தை தனது முழு எழிலோடும், அணிகலன்களோடும் இந்நகரமெங்கும் நடமாடி மக்களைக் களிப்பில் ஆழ்த்தினாள். இப்பொழுதோ, ஒரு விளையாட்டுக் கருவிக்காக நாளெல்லாம் அழுது இறுதியில் அதைப் பெற்றதும், தன் பிறவிப் பயனை யெய்தி விட்டதாக இறுமாந்து, அவ்விறுமாப்போடு தூங்கும் மழலை தேறாச் சிறு மதலையைப் போன்று, அம்மடந்தை நன்றாய்க் கண் வளர்கின்றாள். ஒருபொழுதும் வாழ்வதறியாது கோடியும் கருதும் இந்நகர மக்களது வீண் இறும்பூதெல்லாம், இவ்வொரு கணத்தில் மறக்கப்பட்டன. இத்தகைய ஒரு கணம், மக்களது வீண் ஆரவாரத்தின் புரையையும், சிறுமையினையும் நன்றாக எடுத்துக் காட்டுகின்ற தன்றோ?

நினைக்கும்போதே நெஞ்சம் நடுங்குகின்றது. இவ்வொரு சிறு காலப் பகுதியில் இந்நகரம் பொலிவிழந்து உறங்கிக் கிடப்பது போல், என்றென்றும் நிலைத்து விடும் பெருங் காலப் பகுதியும் ஒருகால் நேருங் கொல்? அஞ்ஞான்று இந்நகரத்து எழுநிலை மாடங்களெல்லாம் கால் சாய்ந்து, பெற்றமுங் கழுதையும் மேயும் பாழிடங்களாகவும், மக்கள் வதிய வொண்ணாக் கடுஞ்சுரமாகவும் மாறிவிட்டால் என் செய்வது?

அழகிலும், புகழிலும் சிறந்த இது போன்ற நகரங்கள் பண்டைக் காலங்

யினை விளக்கின்றது. காலஞ்சென்ற என் ஆசிரியர் சிவ ஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரர் அவர்கள் வாயிலாக யாம் கேட்ட அவ்வரலாற்றை இங்குக் குறிப்பிடுவோம்.

இராமலிங்க சுவாமிகள் இளமையிலேயே தம்பெற்றோரை இழந்துவிட்டமையால் தம் தமயனாராகிய சபாபதிப் பிள்ளையின் ஆதரணையில் இருந்து வந்தனர். சபாபதிப் பிள்ளை தமிழிலே இலக்கிய இலக்கணங்களைப் போதுமான வரையிற் கற்றுச் சிவபுராண படனஞ் செய்வதில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் சைவபுராணங்களைக் கேட்போர் பத்தி பரவசராகும்படி செவ்வையாய்ப் பிரசங்கஞ் செய்வார். அவர் தமது வயிற்றுப்பிழைப்பை முன்னிட்டுச் சென்னையை அடைந்து, சைவப் பிரபுக்கள் சிலரைத் துணையாகப் பற்றித் தமது வா[illegible]க்கையைச் செலுத்தி [illegible] வந்தனர். இங்ஙனம் வாழ்ந்து வரு[illegible]வார்க்குத் தம் இளவலாகிய இராமலிங்கத்துக்குக் கல்விப்பயிற்சி செய்விப்பதில் பெரிதும் ஆவல் உண்டு. அவர் அக்கால முறைமைப்படி திவாகரம், நிகண்டு, சதகம், அந்தாதி முதலிய நூல்களைத் தம் அருமைத் தம்பியாருக்கு நாடோறும் வழுவாமல் கற்பிக்கலாயினர். ஆனால், இராமலிங்கமோ சொல்லிவைத்த பாடங்களைக் கண்ணுங் கருத்துமாகக் கற்பதில்லை; எந்நேரமும் ஏதோ வேறொரு சிந்தையில் ஆழ்ந்து, தமயனார் மொழியைச் சிறிதும் நோக்குவதில்லை. சதா சருவதா நினைவு வேறுபட்டிருக்கும் இளைவராகிய இராமலிங்கம் கல்வி கற்கமாட்டாத மும்மகன் என்றும், அவர் ஒருநாளும் தமது கருத்தை நிறைவேற்றுதிருத்தலின், வழிக்கு வரார்த பிள்ளையென்றும் சபாபதிப் பிள்ளை தீர்மானித்துவிட்டார். அவர் உலக வழிக்கு ஒத்து வாராத பிள்ளை என்பது உண்மைதானே! அவர் தன்மையைக் கண்ட சுற்றத்தாரும் அவ்வாறே எண்ணினர்.

இராமலிங்கமோ எங்கேனும் குறிப்பின்றிச் சுற்றுவதும், மக்கள் கூட்டங்களில் சென்று அவர்கள் வாயைப் பார்த்துக்கொண்டு நிற்பதும், கோயில் குளங்களுக்குச் சென்று வழிபாடு புரிவதும், வேடிக்கை பார்ப்பதுமாகக் காலங் கடத்தி வந்தார். அவர் தாமாகத் தமக்குத் தோன்றிய புத்தகங்களை எடுத்துக்கொண்டு, தமக்கு விருப்பமான நேரங்களில் படிப்பார். ஆனால் தம் தமயனார் கட்டளைப்படி எந்த நூலையும் உருப்போட்டுப் படித்து ஒப்புவிக்கமாட்டார். எனினும், இராமலிங்கம் ஒருநாளும் தம் தமயனாரை அவமதித்தேனும், எதிர்த்தேனும் பேசியதில்லை; அவரைக் குறித்துப் பிறரிடம் முணுமுணுத்துக் கொண்டதுமில்லை.

சபாபதிப் பிள்ளை, தம்பி இராமலிங்கத்தை எவ்வாறேனும் முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்றெண்ணி, அவர் எதிரிலேயே தம் அன்புள்ள மனைவியை அழைத்து, 'இராமலிங்கம் என் சொற்படி நடவாததால் இனி நீ, அவனுக்குச் சோறு போடவேண்டாம்; அவன் இப்பொழுதே வீட்டைவிட்டு நடக்க வேண்டும். நீ என் கட்டளை மீறி நடந்தால் உன்னையும் ஓட்டிவிடுவேன்,' என்று கண்டிப்பாகத் திட்டஞ்செய்தார். இக்கட்டளையை இரண்டொரு முறை பிரயோகித்தும் இராமலிங்கம் சீர்திருந்தவில்லை. பின்னர் இராமலிங்கம், தமயனார் இல்லாத வேளையிலோ, அன்றிக் கண்ணயரும் வேளையிலோ தெரியாமல் புழைக்கடை வழியாகப் போந்து, தம்



அண்ணியாரைக் காண்பார். அவ்வம்மையோ கற்பிற்சிறந்த உத்தமி; கருணை நிறைந்த செல்வி; நற்குடிப்பிறப்பும், ஒழுக்கமும் நிரம்பிய குணவதி. அவள் தம் கணவனார் கட்டளையை இனிதுணர்ந்தும், அவர் வெகுண்டு செய்த பணியை மீறி, அவருக்குத் தெரியாமல் தம் மைத்துனச் சிறுவருக்கு, தாம் பெற்ற சேயினும் பெரிய சேயாக மதித்து, அன்பாற் குழைந்து, அவர் தம் செய்கைக்கு மனம் வெதும்பி நாடோறும் இனிய உணவையும், அரிய மதியையும் புகட்டி வந்தாள். இவ்வம்மையின் செம்மை மொழிகளும் இளைய இராமலிங்கத்துக்கு நன்மை தந்தில.

இங்ஙனம் பன்னெடு நாட்கள் சென்றன. தம்பி இராமலிங்கம் தலையெடுத்ததே யன்றிக் கலை யெடுத்ததில்லை. தமயனார் அறியா வண்ணம் வீட்டுக்கு வருவதும், சோறுண்பதும், கூறை பெற்றுக் கொள்வதும், தமது வழியிலேயே முனைந்து நிற்பதுமாகவே இருந்து வந்தார். சபாபதிப் பிள்ளையோ தம் தம்பியைக் குறித்து ஒன்றும் கேளாது விட்டுவிட்டார். சில வேளைகளில் அவருக்குத் தம் மனைவி தம்பிக்குத் தெரியாமல் ஊட்டி வருவதும் தெரியவந்தது. அதனைக் காணாததுபோல் புறக்கணித்து விட்டுவிட்டார். இவ்வாறிருக்கும் நாளில், ஒரு நாள் சபாபதிப் பிள்ளையின் தாயார் திவசம் வந்தது. அன்று அவர் தம் உறவின்முறையாருக்கும் நண்பருக்கும் தெரிவித்து, மிகச் சிறப்பாகப் பிராமண சந்தர்ப்பணை, அன்னதானம் முதலிய செய்தல் இயல்பு. அங்ஙனமே சிரார்த்தம் சாஸ்திர ரீதியாய்ச் சிரத்தையுடன் நிறைவேறிற்று. எல்லாரும் ஒருங்கமர்ந்து அறுசுவையுணவை ஆர அமர உண்டு களித்தனர். பின்னர், விருந்தினர் எல்லாரும் மேன்மாடத்திற் சென்று, குளிர்ந்த சந்தனம் பூசியும், பரிமள புஷ்பத்தின் நறுமணம் நுகர்ந்தும் தாம்பூலந் தரித்தும் இன்னுரையாடிக்கொண்டிருந்தனர்.

முகமும் அகமும் மலர்ந்து, வந்த விருந்தை ஊட்டி வருவிருந்தை எதிர்நோக்கி யிருந்த சபாபதிப் பிள்ளையின் மனைவிக்கோ உண்பதற்கு மனம் வரவில்லை. அந்நங்கை வேலை மிகுதியால் களைப்புற்று உள்ளமும் கெட்டுச் சோர்வடைந்திருந்தாள். சபாபதிப் பிள்ளையும் தம் சகோதரனை மறந்தவரல்லர். அவர் அனைவரும் வரிசையாகக் கூடி உண்ணுந் தருணத்தில் தம்பியை நினைத்துக்கொண்டார். ஆனால், என் செய்வார் பாவம்! தம்பி எங்ஙனமேனும் வீட்டுக்கு வந்து தன் அண்ணியால் உண்பிக்கப்படுவான் என்பது அவருக்குத் தெரியும். எனினும், தம் அரும்பிறப்பு உடனிருந்து உண்பதற்கில்லையே எனச் சிந்தாகுலம் கொண்டார். பின் அவர் சிறிது சிந்தித்து, எல்லாம் திருவருட் செயலென எண்ணி, வாளாவிருந்தார். அதனால், அன்று அவருக்கும் மனநிறைவு உண்டாகவில்லை.

மணி மூன்றாயிற்று. இதுதான் சமயமென்று அறிந்தனர் இராமலிங்கம். அவர், தம் தமயனார் இப்பொழுது கண்ணுறக்கங் கொள்வார் என்றெண்ணி வீட்டுக்குள் புகுந்தார். அவர் வரவை எதிர் நோக்கிய வண்ணம் வழிமேல் விழிவைத்துப் பார்த்திருந்த அவர் அண்ணியார் உடனே விரைந்து சென்று அவருக்கு இன்னடிசில் ஊட்டினாள். அவருக்குக் கள்ளத்தனமாக இவ்வாறு தம் மைத்துனருக்கு உணவு தருதல் சிறிதும் பிடிக்கவில்லை. [illegible] தனையோ பேர் வ[illegible]மகிழ்வோடு [illegible]

187123

தற்கு மனமில்லா தொழியினும், மேலும், மேலும், புண்ணான நெஞ்சம் புண்படும்படி வசை மொழிகளைப் பெய்வதில் பின் வாங்கினாரல்லர்.

ஓ, ஆண்டவனே, ஏழை மக்கள்; ஊற்றெடுத்தோட ஆறுகப் பெருக்கும் கண்ணீரைப் பார்த்தும், அதனைத் துடைத்தற்கு ஆற்றலில்லாத பாவியேம் ஏனோ மக்களாய்ப் பிறந்தேம். இருக்கவும் இட மற்ற பிராணிகளே! உலகம் உங்களை ஆதரிக்காவிடினும், நிந்திப்பதில் முன்னணியில் நிற்கும்.

"பிரபு" என்று சொல்லப்படுவோன் ஒருவனுக்கு ஓயாக் குடிவெறியால் சிறிது தலைநோய் கண்டாலும், அதனை நூறுமடங்குப் பருமைய தாக்கிப் பத்தி பத்தியாகத் தலையங்கங்கள் எழுதாத பத்திரிகைகள் இல்லை; அநுதாபங் காட்டிப் பேசாத அரங்குகள் இல்லை. குதிரைப் பந்தயத்தில் சிறிது பணம் தோற்றதனால் சற்றே மனத்தளர்ச்சியுற்ற "கனவான்" ஒருவனை வீடு தேடிச் சென்று ஆறுதல் கூறி வராத மனிதன் உலகத்தோடு ஒட்ட ஒழுகுகின்றவனாகக் கருதப் படவில்லை. ஆனால் ஏழைகளின் துயரை யாரே கண்ணெடுத்துப் பார்ப்பவர்? எரிவாய்ப் பட்ட ஏழைகளின் ஓலைக் குடிசைகளைப் புதுப்பித்தலைக் குறித்து ஒரு நகர பரிபாலன சபைக் கூட்டத்தில் ஆலோசனை செய்ய, முக்கிய உத்தியோகஸ்தர் "பணம் இல்லை" என்று சொன்னால், "ஆம், என் செய்வது; வரும் ஆண்டு பார்த்துக் கொள்வோம்; வேறு விஷயம் ஏதாவது எடுங்கள்" என்பார்கள். "அப்பெரிய மனிதனுடைய திருவுருவப்படத் திறப்பு விழாவிற்கு எவ்வளவு செலவாகும்" என்று மற்றவர்கள் சொல்லி விடுகின்றனர். ஏதோ வருமென்று மலைத்திருந்த வறியர்கள் இலவு காத்த கிளியாயினர். "வரும் ஆண்டு" என்பதை எண்ணும் போது கடைத் தெருவுகளில் "நாளைக் குக் கடன்" என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி நாடோறும் தூங்க விட்டிருப்பது எம் நினைவிற்கு வருகின்றது. மற்றவர்களுக்குப் பதுங்கியொளிய ஆதார வளிக்கும் இந்நாட்டுச் சட்டமும், இவ்வேழைகட்குப் பகையாயிருக்கின்றது.

பிறர் துயரங் கண்டு பொறுது துணுக்குறும்படி ஏன் எம்மனம் இத்துணை நுட்பமாய் அமைந்திருத்தல் வேண்டும்? எவர் எக்கேடுறினுஞ் சரியே, எம் வினையுன்னி யாம் செல்வோம் என்னும் கயவர் மனப்பான்மை எமக்கு அமைந்திருத்தலாகாதா? ஆம் உண்மையாகவே, பிறர் இடுக்கண்களைக் கண்டும், அவைகளை நீக்க முடியாமையால் எமக்கு உளவாகும் துன்பம், அவ்விடுக்கண்களால் நலிவோரது துன்பத்தைக் காட்டிலும் மிகப் பெரிதாயிருக்கின்றது. நல்கூர்ந்தான் இன்னலம் பூத்தலிற் பூவாமையே நன்று.

"மண்ணுலகத்தில் உயிர்கள் தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் தரித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின் திருவருளாய்
இசைந்தபோது இசைந்தபோ தெல்லாம்
நண்ணும் அவ்வருத்தம் தீர்க்குநல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்"

—இராமலிங்க சுவாமிகள்.

[குறிப்பு:— இக்கட்டுரை இங்கிலாந்து நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டில் பெரும்புலவராக விளங்கிய ஆலிவர் கோல்டுஸ்மித் என்பார் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையினைப் பெரும்பாலுந் தழீஇ எழுதப் பட்டது.]

# இராமலிங்க சுவாமிகள் கல்விகற்ற வரலாறு

[பத்திராசிரியர்]



இராமலிங்க சுவாமிகள்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளை அறியாதார் ஒருவரும் இலர். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள் எவ்விடத்தும் பாடப்பட்டு வருகின்றன. அவர் திராக்ஷா பாகமாகச் செய்யுள் செய்வதில் அதிசமர்த்தர். அவர் பாட்டுக்கள் பண்டித பாமர ரஞ்சகமாக இருத்தலின், அவை கல்வி மிகுதியும் இல்லாதவருடைய மனத்தையும் அழலிடைப்பட்ட வெண்ணெய்போல உருகும்படி செய்து, அன்பில் ஈடுபடுத்துகின்றன. இத்தகைய பெரியார் தமது இளமைப் பருவத்தில் எங்ஙனம் கல்வி கற்றுக்கொண்டார் என்பது மிக்க சுவை

சுவாமிகள் திருவுருவப்படம் சென்னை இராமலிங்க சுவாமிகள் சமரச சன்மார்க்க சமாஜம் காரியதரிசி, திருவாளர் T. சாம்பசிவ முதலியார் அவர்களால் உதவப்பட்டது.

அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். சபாபதிப் பிள்ளைக்கோ உவகை பொங்கி வழிந்தது. சிலர், 'அப்பா, இவர் தீபத்தில் ஏற்றிய தீவர்த்தி' என்றார்கள். சிலர், 'இவர் ஓரே தறியில் துணித்த துண்டு' என்றார்கள். சிலர், 'அண்ணன் துப்பாக்கி என்றால் இவர் பீரங்கி' என்றார்கள். சிலர் 'இது உற்பாத பிண்டம்' என்றார்கள். பிரசங்க சபையில் தேவாமிர்தம் கொழித்தது.

அன்றிரவு பிரசங்கம் முடிந்தவுடன் சபாபதிப்பிள்ளை மனையைச் சேர்ந்து, தம் அரும்பெறல் வாழ்க்கைச் செல்வியிடம் நிகழ்ந்தவற்றைச் செப்பி நிறை மகிழ்வு கொண்டார். அவ்வம்மை ஏதோ கடவுள் கண் திறந்தார் என்று கூறி முக மலர்ச்சியுடன் தம் கணவரிடம் மொழிந்து விட்டு, உள்ளுக்குள் பெருங்களிப் படைந்தார். அவ்வம்மை மறுநாள் தம்பிக்குக் கண்ணேறு கழித்தாள்; இராமலிங்கம் புன்னகை அரும்பினார். இப்பொழுதும் இராமலிங்கம் தம் மூத்தவர் எதிரிலே வருவதில்லை. இங்ஙனம் பல நாள் சென்றன.

ஒருநாள் சபாபதிப் பிள்ளை திடீரெனக் கடுங் காய்ச்சலால் வருந்தினார். அன்று முத்தியாலுப் பேட்டையில் செல்வத்திற் சிறந்த ஒரு வணிகர் வீட்டில் பிரசங்கம். அவருக்கோ படுக்கையை விட்டு எழவும் இயலவில்லை; பித்தம் தலை சுற்றுகிறது; தலை யிடிக்கிறது. அவர் மனைவியிடம் சொல்லித் தம்பி இராமலிங்கத்தை அழைத்தார். 'அப்பா, நீ செட்டியாரிடம் சென்று நான் இவ்வாறு துன்புறுவதாகச் சொல்லி விட்டு வா,' என்று அனுப்பினார். அவர் பணித்தவாறே இராமலிங்கம் அங்கே சென்றார். மக்கள் திரண் டிருந்தனர்; சுவாமிப் படங்கள் பல அழகாக அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தன; கூடத்தின் நடுவில் பெரிய நடராஜர் படம் ஒன்று ரோஜாமாலை சூட்டி ஒரு பலகையின்மீது வைக்கப்பட்டிருந்தது. அப்படத்தின் திருவுருவம் புதிதாகச் சமைக்கப்பட்டது; அது பேரழகு ததும்பி யிருந்தது. அதன் முன்னர்த் தேங்காய், பழம், கடலை, தின்பண்டங்கள், கற்கண்டு முதலியன தட்டு தட்டாய் வைக்கப்பட்டிருந்தன. விளக்குகள் எங்கும் தொங்கவிடப்பட் டிருந்தன. இந்நிலையில் இராமலிங்கம் சென்று பிரசங்கம் நடைபெற முடியாமையைப் பற்றிக் கூறினால் அவர்கள் மனம் எப்படி இருக்கும்? செட்டியார் உள்ளம் உடைந்தார்; பெருமூச்செறிந்தார்; இனி என்செய்வேன் என்று கவன்றார். அப்போது, அவருக்கு அக்கம் பக்கத்திலேயிருந்தவர்கள் அவர் நிலையை உணர்ந்து, இராமலிங்கத்தைத் தம்மால் இயன்ற வரையில் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டனர். அவரோ தமக்கு யாதுந் தெரியாதெனப் பன்முறை தடுத்தார். அவர்கள் அவரை விட்ட பாடில்லை. அதன்மேல் அருள் கனிந்த நெஞ்சையுடைய இராமலிங்கம் அன்று சொல்லக் கடவதாகிய பரஞ்சோதி முனிவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிளையாடற் புராணத்துள், 'வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தைப்' பத்திச்சுவை சொட்டச் சொட்ட யாவரும் கருவி கரணாதி சேட்டையற்று நிற்ப, விடிய விடியப் பிரசங்கித்தனர். ஜனங்கள் வியப்பால் விழுங்கப்பட்டு இராமலிங்கம் சாதாரண மனிதரல்லர்; ஏதோ தெய்வப்பிண்டம் எனக்கொண்டு அவர்பால் அச்சமும், அன்பும் கொண்டு நின்றனர்.



பின்னர், அவ்வணிகப் பிரபு சபாபதிப் பிள்ளைக்குப் பதிலாக இனி அவர் தம்பியே பிரசங்கம் செய்தால் போதுமென்று கூறினர். சபாபதிப் பிள்ளை 'குடும்ப பாரம் இனிக்குறையும்; இருவரும் பொருள் ஈட்டுதல் சாலவும் நன்'றென உட்கொண்டு வேறோரிடத்தில் தாமும் ஒரு பிரசங்கஞ் செய்து வந்தனர்.

இப்படி நிகழுங் காலத்தில், சபாபதிப் பிள்ளைக்குத் தம் தம்பியார் பிரசங்கத்தைக் கேட்க வேண்டுமென்ற வேணவா உண்டாயிற்று. அதனால், அவர் ஒருநாள் முக்கியமாகத் தம்பியாருக்கும், பொதுவாகப் பிறருக்குந் தெரியாதபடி சபையின் ஒரு மூலையில் இருந்தார். பிரசங்கம் தொடங்கப்பட்டது; கையேடும் இல்லை; பேரேடும் இல்லை. இராமலிங்கம் பெரிய புராணத்திலே 'திருவாரூர்ச் சிறப்பை' எடுத்துக்கொண்டு சோனாமாரியாகப் பொழியத் தலைப்பட்டார். அவர் வாக்கிலே மதுரமான தமிழ்ச் சொற்கள் தங்கு தடையின்றிக் கரைபுரண்ட வெள்ளம் போல வந்துகொண்டிருந்தன; மனத்தில் கருத்துக்கள் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டே யிருந்தன; சொல்லும் தோரணையும், வாக்குபடுத்துவமும், காட்டும் நயனும் பயனும் சபாபதிப்பிள்ளைக்குப் பீதியை உண்டாக்கின. அன்று முதல் அவர் தம் தம்பியாரைத் தெய்வமாகவே கருதி வந்தார்.

---

# சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம்

[உதவிப் பத்திராசிரியர்]

செந்தமிழ் மொழியின் வனப்பெலாம் ஒருங்கு திரண்டு, சைவ நல்லொளி வீசி, ஞானப்பொருள் வளம் முற்றி, அருள் வளம் பழுத்து, சிவ மணம் கமழ்ந்து, பத்தித் தனித்தேன் பெருக்கெடுத்தூற்றும் தெய்வத் திருவருட் காவியமாக இலங்குவது நந்தம் சேக்கிழார் பெருமான் இயற்றியளித்த திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணமாம். இத்தெய்வத் திருவருட் காவியமானது, தில்லைத் திருச்சிற்றம்பலமென்னும் சிதாகாச பரவெளியினூ டெழுந்த இறைவனது 'உலகெலாம்' என்னும் அருணாத வொலியின் அமுததாரை தோய்ந்தினிக்கும் அற்புதப் பொற்பாக்களால் ஆக்கப் பெற்றுப் பொலிவுறுவதாம். இதனைத் திருவருள் ஆணை வழி நின்று திருச்சிற்றம்பல மகா சந்நிதியரங்கிருந்து கேட்ட அநபாயன் என்னும் வளவர்பெருமான், இஃதியற்றியருளிய சேக்கிழார் பெருமானார்க்குத் தொண்டர் சீர்பரவுவார் என்னும் சிறப்புப் பெயர் வழங்கி, இம் மாபுராணத்தினைப் பதினொரு திருமுறைகளோடொன்றென வைத்துப் பன்னிரண்டாந் திருமுறையாக்கி, இதன் தெய்வப்பெற்றிமை இற்றெனக் காட்டி நிலை நிறுத்தினான்.

திவ்வியம் பழுத்த சைவசித்தாந்த தெய்விக ஞானாற்புத மெய்கண்ட மரபு தழைய வெழுந்தருளிய உமாபதி சிவாசாரியர் நம்பெருமானின் செந்தமிழியல் வளங்கொழிக்கும் செந்நாப் புலமையும், திருவருட்செல்வம் விஞ்சிய மருவரு செம்மையும் தம் முட்டுலங்க

றார உண்டிருப்ப, இவர் இவ்வாறு வேளை தப்பி வந்து பதனழிந்த உணவை உட்கொள்ளும்படி இறைவன் கட்டளை நேர்ந்துளதே,' என்றுன்னி உருக, அவர் கண்களில் நீர் முத்து முத்தாய் வடிந்தது. அது 'பசி ருசி யறியாது' என்னும் பழமொழிக் கிணங்க ஆர்வமும், எங்கே தமயனார் வந்துவிடுவாரோ என்ற அச்சமும் ஓங்க விரைந்துண்ணும் இராமலிங்கம் கண்களுக்குப் புலப்பட்டது. புலப்படலும், அவர் 'அன்பு அன்பைத் தோற்றுவிக்கும்' என்னும் உண்மைக் கிணங்க, தம் அண்ணியார் முகம் பொலிவழிந்து விழிநீர் பெருக்குதலைக் காணப் பொறாராய் உண்ணுதல் தவிர்ந்து, அவரை நோக்கி, 'அண்ணியம்மா, நீர் ஏன் புலம்புகிறீர் ?' என்று வினவினார். அதற்கு அவள் மறுமொழி புகலாது வாளா திருந்தாள். அவளை மீண்டும் மீண்டும் இராமலிங்கம் வற்புறுத்தினார். அதனால் அவ்வம்மை தமது கண்ணீரைத் துடைத்துக் கொண்டு 'தம்பி, உன் நிலைமையைக் குறித்துத்தான் அழுகிறேன்; நீ எப்படி உலகத்தில் வாழப் போகிறாய்; நீ இப்படி எத்தனை நாளைக்குத் திருடனைப் போல வந்து போவது ? எனக்குப் பிற்காலத்தில் உன் வாழ்க்கை என்னாகும் ?' என்று கூறித் தேம்பித் தேம்பிப் புலம்பினாள்.

இராமலிங்கம் அறிவு தூண்டப்பட்டது ; உணர்ச்சி ஓங்கியது. அன்னையினும் ஆயிரம் மடங்கு அதிகமாகத் தம்மைப் பேணி வளர்த்த அண்ணியார் வருத்தத்தை அவரால் தாங்க முடியவில்லை. அதனால், அவர் அவ்வம்மையை நோக்கி, 'அண்ணியம்மா, உங்கள் விருப்பம் யாது ? அதைக் கூறினால் [illegible] செய்வேன்,' என்றார். 'நீ உன் தமயனார் விருப்பத்தின்படி கல்வி கற்கவேண்டியதைத் தவிர்த்து நான் என்ன சொல்லப் போகிறேன்,' என்றார். 'ஆனால் அப்படியே நான் செய்யத் தடையில்லை. நாளைக்கு மேன்மாடியில் எனக்குத் தனியே ஓர் அறையை விட்டுவிட வேண்டும். அவ்வறையை மெழுகித் தூய்மை செய்து வைத்து விடுங்கள் ; நான் கல்வி கற்கத் தொடங்குவேன்,' என்றனர்.

அவர் அண்ணியம்மை அங்ஙனமே செய்ய ஒப்புக்கொண்டாள். அதன்மேல் இராமலிங்கம் தமக்கு ஒரு நிலைக்கண்ணாடியும், சில பரிமள வர்த்திகளும் வேண்டுமென அண்ணியிடம் கூறிப் பொருள் பெற்றுக்கொண்டு அவற்றை வாங்கி வந்து தமது அறையிலே வைத்துக்கொண்டார் ; பிறகு, அவ்வறையின் கதவை மூடிக்கொண்டு நாடோறும் படித்துக்கொண்டு வந்தார். சபாபதிப் பிள்ளை, ஏதோ தம் இளவல் நல்வழியில் திரும்பி விட்டான் என்றெண்ணிப் பேசாம லிருந்தார். ஆனால் இராமலிங்கம் இன்ன நூலைப் படிக்கின்றார் என்பது யாருக்கும் தெரியாது. கேட்பவர்கட்கெல்லாம் அவர், 'இராமலிங்கம் ஏதோ குறியாய் ஓரிடத்தில் தங்கித் தரித்து இருக்கிறான் ; ஆனால், கதவை மூடிக்கொண்டு நாள் முழுவதும் படித்துக்கொண்டிருக்கிறான் ; அவன் இன்னது படிக்கிறான் என்பது இறைவனுக்கே வெளிச்சம்' என்று மொழிந்தனர். எனினும், அவருக்கு வீடு தங்கி தம் தம்பி யிருப்பது பெருமகிழ்வை விளைத்தது. இங்ஙனம் நாள் பல சென்றன.

பின்பு ஒரு நாள் சபாபதி பிள்ளைக்குக் கையேடு வாசிக்கும் பெண்மணி நோயுற்றாள். அவளுக்குக் கையேடு



அவ்வம்மையே வாசித்து வருதல் வழக்கம். அவ்வம்மை இனிய குரலும், சிறிது இசைப் பயிற்சியும் உடையவள் ; பிரசங்கத்தின் இடையிடையே தேவாரத் திருப்பாசுரங்களைப் பண்ணுடன் பாடுவாள் ; அன்றியும், பௌராணிகருக்கு ஆங்காங்கு வேண்டப்படும் மேற்கோள்களைச் சமயமறிந்து எடுத்துச் சொல்லுவாள். அதனால் சபாபதிப் பிள்ளைக்கு அவ்வம்மையின் உதவி யின்றிப் புராணஞ் சொல்லுதல் இயலாததாக இருந்தது. ஏடு வாசிப்பவர் பெண்பாலரா யிருந்ததால் சில இடர்ப்பாடுகளும் இருந்தன. அவ்வம்மை கைம்பெண் ; சபாபதிப் பிள்ளைக்கு நெருங்கிய உறவினள். அவள் யாருடைய பார்வைக்கும் தோன்றாதவாறு அவளைச் சுற்றி ஒரு மெல்லிய துணி சதுரமாகக் கட்டப்படல் வேண்டும். அங்ஙனம் கட்டப்படுதல் குறித்த நேரத்துக்கு முன்னரே நடைபெறல் வேண்டும். இவ்வளவு இடர்ப்பாடுகளையும் எண்ணாமல் சபாபதிப் பிள்ளை அவள் வருவாய் தமது குடும்பத்தைச் சார்தலினாலும், அவள் திறமையுடையவளாக இருத்தலாலும், வேறொருவர் தமக்குக் கிடைக்காததாலும், அவளைக் கொண்டே தமது தொழிலை நடத்திவந்தனர். ஆனால், அவருக்கு அடிக்கடி தம் சகோதரர் கையேடு வாசிப்பதா யிருந்தால் எவ்வளவு நன்றா யிருக்கும் என்னும் எண்ணம் உதிப்ப துண்டு.

அற்றைநாள் கையேடு வாசிப்பவள் பிணியாய் இருந்ததால் பிரசங்கத்தை நிறுத்தி வைக்க வேண்டும். ஆனால், அன்று பிரசங்கம் நிறுத்தக் கூடாததா யிருந்தது. பிரசங்கம் வைத்தவர்கள் ஆவலோடு அதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர் ; அவர்கள் ஏமாற்றத்தை அடைவது சபாபதிப் பிள்ளைக்கு விருப்பமில்லை. அதனால், அவர் தம் இனிய அரிய மனைவியை அழைத்து, 'இன்று என்ன செய்வது ? பிரசங்கத்தை நிறுத்த எனக்கு எள்ளளவும் விருப்பமில்லை.? ஏடு வாசிக்கவோ ஆளில்லை. நான் தனியாகச் சொன்னாலும் சபைக்கு அலங்காரமாய் இராது,' என்றனர். அவ்வம்மை உடனே, 'இதோ வந்து விட்டேன்' என்று கூறித் தம் கொழுந்தரிடம் சென்று, 'தம்பி, உன் தமயனார் பிரசங்கம் நின்றுவிடுகிறதே என்று தவிக்கிறார்; நீ ஏடு வாசிக்க மாட்டாயா? நீ வாசிப்பதாய் இருந்தால் பிரசங்கம் நடைபெறலா மல்லவா? வாசிக்கிறாயா ? தைரியமாய்ச் சொல்,' என்று கேட்டாள். இராமலிங்கம் சிறிதும் தாழ்த்தாது கையேடு வாசிக்க ஒப்புக்கொண்டார். இதனை உவகை துளும்பக் கேட்டுக்கொண்ட அவ்வம்மை, தம் கணவனாருக்கு இதனை எடுத்து மொழிய அவர் அரை மனமாய் ஒப்புக் கொண்டார் ; அவருக்கு இராமலிங்கம் எப்படிப் படிப்பாரோ என்ற ஐயுறவு இருந்தது.

அன்று இரவு பிரசங்கம் துவக்கப்பட்டது. சபாபதிப்பிள்ளை கடவுள் வணக்கச் செய்யுட்களைச் சொல்லி முடித்தனர். இராமலிங்கம் புராணம் வாசிக்கத் தொடங்கினார். எடுத்த எடுப்பே எல்லாருக்கும் இன்பத்தை ஊட்டியது ; குரலின் சுவையும் கூடிக்கொண்டது ; சொல்லும் வகையோ மனத்தைக் கரைக்கிறது ; ஒவ்வொரு மொழியும் உள்ளத்தே பொதிந்து அன்பினூறித் தேனினூறிய பழம்போலத் தித்திப்பூறி வருகின்றது. பாட்டைப் பிரித்துப் பிரித்து அந்துவயித்துப் படித்தார் ; இடமறிந்து தொடர்களை எடுத்துக் கொடுத்தார். மக்கள்

இலங்கும் அவரது 'மங்கல சின்மய மதுரத் தமிழ்ச் செம் பாடல் வாரி' வளங்கண்டு,

'தேவரு மெழுதவொண்ணு மறையைத்
தமிழ்செய்து திருப்பதிகம் பாடும்
மூவரு மொருமுதலா யுலகத்து
முளைத்த முதற்பொருள் தாமென்பார்'

என விதந்து கிளக்குமாற்றான் அவர் தம் புண்ணிய நலத்தின் மிக்க பொருவரு நிலையை எண்ணி இசைத்தனர்.

சொல்விற்பனம் விளையு மதுரக் களஞ்சியமென விளங்கிய நம் குமர குருபர முனிவரர், இம்மா புராணத்துச் செய்யுளொன்றிற்கு அனுபவப் பயனறியாது மயங்கிய அவ்வற்புதச் செய்தி நம்பெருமானின் சிவபோகக் கொழுந்தேறல் வாய் மடுத்துத் தேக்கிய சிவானந்தானுபவ விளைவின் தெளிவைப் புலப்படுத்தி நிற்கின்றது. இச்சகலாகம பண்டித தெய்வச் சைவராகிய சேக்கிழார் மீதொரு பிள்ளைத் தமிழியற்றிப் பேறு பெற்ற நல்லறிஞராகிய மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் கருதித் தொகுத்த இவர் தம் மெய்ப்புகழ்க் கோர் எல்லையின்றாதல் நந்தமிழுலகு நன்றறிந்த தொன்றாம். 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவா' என்னுமப் பிள்ளைத்தமிழ்த் தொடர் பன்முறையும் சுவைத்துச் சுவைத்து பாராட்டற் குரியது.

இங்ஙனம் மெய்யுணர் வெய்தித் தெய்வப் புலமை மிக்க நம் நாவலர் பெருமானது அருணலங் கனிந்து அமுதஞ் சொரியும் திட்ப நுட்பஞ் செறிந்த செஞ்சொற் கவிகளின் செம்மை நலம் அளத்தற் கரிய தொன்றாம். சொற்பொருள் நுட்ப திட்பங்களானும் இன்னோசையானும் எழில் சிறந்து விளங்கும் நலம்படு செய்யுட்களின் தீஞ்சுவை பெரிதும் பொதிந்து கனிந்த நற்றமிழ்ப் பிண்டத்தினை ஆசிரியர் தெய்வப் புலமைத் தோல்காப்பியனார்

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியானடி நிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்.

என இலக்கண வகையாற் பாகுபடுத்தெடுத்துத் தமிழியல் வளத்தின் சிறப்பு மிக்க தோல் என்னும் வனப்பின் பாற்படுத்துக் காட்டுவர். இதனை 'மூவா முதலா வுலகமொரு மூன்று மேத்த' என்றற் றொடக்கத்துச் சிந்தாமணிச் செய்யுளுரைக்கண் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பா நான்கென்றும், அவற்றை அறம்பொரு ளின்பத்தாற் கூறுகவென்றுங் கூறிப் பின் அம்மை முதலிய எட்டும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணமென்று கூறுகின்றுழி 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்' என்பதனால் மெல்லென்ற சொல்லான் அறம்பொருளின்பம் வீடென்னும் விழுமிய பொருள் பயப்பப் பழயதோர் கதை மேற் கொச்சகத்தாற்கூறின் அது தோல் என்று கூறினமையின் இச்செய்யுள் அங்ஙனம் கூறிய தோலாமென்றுணர்க' என நன்கெடுத்து விளக்கினர்.

நாநலங் கனிந்த இம் மெல்லோசையின்பம் யாண்டும் நிரம்பித் துளும்புமாற்றானும், வீடென்னும் விழுமியது பயக்கும் பழங்கதை கிளத்தலானும், இத்தோல் என்னும் வனப்பு முழுதும் தழீஇ ஒளி விட்டிலங்குவது நந்தம் பெரிய புராணமா மென்பது அப்புராணத்தினது எப்பகுதியானும் இனிது காட்டப்படுவதாம்.



உலகியலறிவும் திருவருட் பொலிவுங் கலந்து பரந்து விரிந்த மனோபாவனையின் நல்வளம் பழுத் தெழுந்த தேம்பொதி கிளவிகளின் இன்னோசை கெழுமி, இன்பவெள்ளமென ஊற்றெடுத்தோடும் இவர்தம் பெருமிதவளம் பல நிறைந்த நடைச்சிறப்பு யார்க்கும் வாய்ப்பப்பெறாத தொன்றாம். அந்நிலையில் நம்பெருமான், தனி முடிகவித்தரசாளும் சக்ரவர்த்தியெனத் துலங்குகின்றார். இவர் தமது மாபுராணம், நவரசத்துறை மிக்குடைய நற்றமிழ்ப் பேரியாற்றின் நலம்படும் அமுதவெள்ளமென வயங்குகின்றது. சொற்சுவையோ தேனும்பாலு முடன்கலந்தட்ட தேமாஞ் செழுங்கனித் தீஞ்சுவைத் திரளெனத் துலங்குகின்றது. பொருட் சிறப்போ அருளானந்தப் பெருங்கடலின் அலைவா யெழுந்த அமுதமயமா யிலங்குவது. இன்னோரன்ன நன்னலம் பெரிதும் துதைந்து மிளிரும் பெரிய புராண வருஞ்சிறப்புப் பாவிலு மடங்கா நாவிலு மடங்கா எனக் கூறன் மிகையாகாது.

"புவியினுக் கணியா யான்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
யவியகத் துறைகள் தாங்கி
யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமும் பயின்று சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்"

என வருங் கம்ப நாடரது கவியிலக்கணத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் நின்றிலங்குவது நந்தம் பெரிய புராணமே யாம். செந்தமிழ் தெய்வப் புவியின் திகழ்தரு நித்தில வணியினிலங்கி, சிவஞான மிக்க சிறப்பென்னும் செம்பொருள் பயந்து, நவில்தொறும் நவில்தொறும் நயம்பல காட்டும் பொருட்பரப்பின் மிக்க அருட் செம்புலம் வாய்ந்து, திருத்தொண்டர்களது கரும ஞான அருளொழுக்கங்களாம் அளவில துறைக ளேய்ந்து, செந்தமிழ் நானிலத் தைந்திணை வளன் தழீஇய திணைப்பாகுபாடுகள் தோய்ந்து, முழுமணித் திரளென ஒள்ளொளி ததும்பும் சொன்னலத் தெளிவது துலங்க, இறைவனது அருட்பெருவெள்ளத் தண்ணளி விளங்க, எழிசையினியல் வளங்கொழிக்குங் குழலினும் யாழினும் மீக்கூர்ந்து இன்ப மளிக்க வல்ல சொற்சுவை பழுத்தோடுஞ் செய்யுளோசை யொழுக்கம் இழுமென வயங்க, எத்திசையும் புகழ் மணக்க இருந்துலவும் நம் பெரிய புராணத்திற் சிறந்த பிறிதோர் எடுத்துக்காட்டு அதற்கின்றாதல் கண்டு கொள்க.

இவ்வருட்காவிய முழுவதூஉம் பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுளாம் பரசிவ வழிபாட்டிற்றலைநின்று நாற்பாத வாயிலான் வீடுபேறெய்திய விழுத்தவ மிக்க உண்மை நாயன்மார்களது கரும ஞான அருளொழுக்கங்களே சரிதவாயிலான் எடுத்துரைக்கப்படுதலின், அம்மெய் வரலாற்றின் புண்ணியப் பொருட்டுறைகளின் கண்ணெல்லாம் தெய்வமணந் தேங்கி நிற்றல் இயல்பேயென்பது யார்க்கு மினிது விளங்கிக் கிடப்பதொன்றாமெனினும் மற்றதனின் மாறுபட்ட முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலத்தைந்திணைவளன் தழீஇ நடைபெறும் நாடு நகரச் சிறப்புக்களினும், யாறுமலை கானங்களின் எழில்களினும், அருணோதயத்தின் அழகொளிப் பரப்பினும், செக்கர்வான் சிறப்பின் செஞ்சுடரணியினும், தண்கதிர் மதியத் தெண்ணில் பேரழகினும், அகனைந் திணையின் அன்புடைக்காம இன்பச் சுவையினும் தெய்வமணங் கமழ்ந்திலங்கச் செய்யுளியற்றும் செம்புல மாட்சிப் பெரிதும் வியந்து பாராட்டற்குரியதாதலின் அவ்வியல்பு பற்றி வரூஉம் நம் அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமான் திருவாக்குக்களுள் தாலிபுலாக நயம் பற்றி ஒரு சில எடுத்துக் காட்டுதலே இக்கட்டுரையின் கருத்தாமென்பது.

புண்ணியஞ் செய்தவர்கள் தங்கள் புண்ணியங்கட்கு ஏற்றபடி சுவர்க்க லோகங்களிலும், பாவஞ் செய்தவர்கள் தங்கள் பாபத்திற் கேற்றபடி அதோ லோகங்களிலும் வசிப்பார்கள்.

***

மரத்தின் வேரில் ஊற்றிய நீர் அதன் கிளை, இலை முதலியவற்றிற்கும் பாய்வது போல மூலகாரணனை சிவபெருமானை அர்ச்சிப்பதால் எல்லாத் தேவர்கட்குந் திருப்தி யுண்டாகும்.

***

சூரியனைக் கண்ட மாத்திரமே இருளொழிவது போல மகாத்மாக்களைத் தரிசித்த மாத்திரத்திலேயே தரித்திரம் தூர விலகி விடும்.

***

மரம் பொன் சந்தனம் இவை தாம் துன்புற்றாயினும் பிறர்க்குப் பயன்படுவது போலத் தாம் கஷ்டமுற்றாயினும் பிறருக்கு உதவி செய்யவேண்டும்.

கண்ணுக்குப் புலப்படும் யாவும் சிவசொரூபமே யெனத் தியானித்தால் சிவனருள் சீக்கிரம் கிடைக்கும்.

***

நடக்கை, செய்கை, மொழி முதலியவற்றால் ஒருவனுடைய எண்ணத்தை அறியலாம்.

***

மடியாதிருப்போர் வையகத்தில் ஒருவருமிலர். கடவுள் ஒருவனே இறவாதவன்.

***

மலரில் மணமும் மணியில் ஒளியும் போற் சிவபெருமான் பிரிவற்றவர்.

***

ஆல விருட்சத்தின் விதை சிறிதாயினும் மரம் பெரிதா யிருப்பது போல மந்திரம் சிறிதாயினும் தியானிப்பவர்கட்குப் பெரும் பலனை அளிக்கத் தக்கது.

—" லோகோபகாரி "

# செய்தித் திரட்டு

## யானையின் நன்றி

யானைகள் மிகுந்த ஆப்பிரிக்கா காடு ஒன்றில் ஒரு மனிதன் ஏதோ அலுவல் நிமித்தம் சென்று கொண்டிருக்கையில், ஒரு யானைக் குட்டி நொண்டி நொண்டி நடந்து கொண்டிருப்பதைக் கண்டான். அருகில் சென்று பார்த்தபோது அதன் காலில் ஒரு பெரிய முள் குத்திக்கொண்டிருப்பது தெரிய வந்தது. அவன் அம்முள்ளைப் பிடுங்கி எறிந்து விட்டுத் தன் வழியே சென்றான். இது நடந்து சில ஆண்டுகள் ஆகிவிட்டன. சமீபத்தில் அம்மனிதன் இங்கிலாந்தில் சர்க்கஸ் வேடிக்கை பார்க்கச் சென்றபோது அங்குப் பெரிய யானை ஒன்றைப் பார்த்தான். உடனே அவனுக்குத் தான் ஆப்பிரிக்கா காட்டில் பார்த்த யானைக்குட்டியின் நினைவு தோன்றிற்று. இவ்வாறு அவன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போதே அந்த யானை அவனருகில் வந்து மூன்றாம் வகுப்பிலிருந்த அவனைத் துதிக்கையால் கட்டித் தூக்கிக் கொண்டு போய் முதல் வகுப்பில் உட்கார வைத்ததாம்! —" ஸைபுல் இஸ்லாம் "

## கடல் ஒதுங்கிச் சென்றது

### ஆலப்புழையில் ஆச்சரியம் அதன் காரணம் என்ன?

திருவனந்தபுரம், ஆகஸ்டு, 13.

ஆலப்புழைக் கருகில் கடல் ஒரு மைல் தூரம் வரை பின்னோக்கி ஒதுங்கிச் சென்றதாகச் செய்தி எட்டி யிருக்கிறது. படகுகளும், கட்டு மரங்களும் உலர்ந்து கிடக்கின்றன. கடல் ஒதுங்கிப் போனதால் உலர்ந்து கிடக்கும் மணல் தரையில் கடலில் வசிக்கக் கூடிய பாம்புகளும் மீன்களும் இறந்து கிடக்கின்றன. இவ் வேடிக்கையைப் பார்க்க கும்பல் கும்பலாக ஜனங்கள் கூடுகின்றனர். ஆலப்புழை மாஜிஸ்திரேட் இதைப் பற்றி திவானுக்குத் தந்திகொடுத்திருக்கிறார். டச்சு இந்தியத் தீவுகளிலுள்ள பலவி என்னும் தீவு பூகம்பத்தினால் ஆழ்ந்து விட்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. சில வருஷங்களுக்கு முன்னரும் காகோடோவா தீவில் எரிமலை கிளம்பியபோதும் இவ்வாறே திருவாங்கூரில் கடல் ஒதுங்கிச் சென்றது.

" தமிழ் நாடு "



## அதிசய வால் நக்ஷத்திரம்

கல்கத்தா, ஆகஸ்டு, 14.

நேற்றிரவு 9-15-மணிக்கு நட்சத்திரங்களிடையே வால் நட்சத்திரமொன்று தோன்றியதாகவும், அது பாலைப்போல் வெண்மையாகவும், சற்றும் அசையாத ஆகாய விமானம் போலும் தொங்கிக் கொண்டிருந்ததென்றும், பிறகு விசிறியைப் போன்ற வாலுடன் மாறியதாகவும், பிறகு தெற்கில் போவது போல் சிறிது சிறிதாக அசைந்து 10-நிமிஷத்திற்குள் மறைந்து விட்டதென்றும் " இங்கிலீஷ்மன் " பத்திரிகை கூறுகிறது.

—" தமிழ்நாடு "

## உறக்கம் விளைக்கக்கூடிய யந்திரம்

மேல் நாடுகளில் பல செல்வர்களுக்குப் படுக்கைக்குப் போனவுடன் உறக்கம் வருவதில்லை. சிலருக்குப் படுத்தவுடன் கதைகள் சொன்னால் உறக்கம் வருகிறது. கதை சொல்வதற்காகச் சிலரை நியமித்திருக்கிறார்கள். சிலருக்குக் கைகால்களை பிடித்தால்தான் உறக்கம்வரும். ஜெர்மனியிலுள்ள டாக்டர் ஒருவர் உறக்கம் விளைக்கக்கூடிய யந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். அது உறக்கம் வாராதவர்களுக்கு உறக்கம் வரும்படிச்செய்கிறதாம். அதற்குச் சாவி கொடுத்ததும் அதிலிருந்து மிகவும் இனிமையான ஒரு ராகம் உண்டாகிறதாம். சுமார் இரண்டு நாழிகை நேரம் நீடித்திருப்பதால் அந்த இராக்காலத்தில் எப்படிப் பட்டவர்களும் உறங்கி விடுகிறார்களாம். " லோகோபகாரி "

## 250 வயதுள்ள ஒரு கிழவர்

சீனாவில் கெய்சீன் என்னும் கிராமத்தில் லிசிங்யூன் என்னும் பெயர்கொண்ட 250 வயதான கிழவர் இருக்கிறாராம். அவர் இன்னும் உடலுறுதியுடன் இருக்கிறார். அவர் மனத்தை அமைதியுடன் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார். ஆமையைப்போல் உட்கார வேண்டுமென்றும், மாடப் புறாவைப்போல நடக்க வேண்டுமென்றும், நாயைப்போல உழைக்க வேண்டுமென்றும் கூறுகிறார். அவர் ஐம்பது வயது ஆண் பிள்ளைபோலவே யிருக்கிறார். அவர் பதினொன்குமுறை கலியாணஞ் செய்து, 180 பேரப் பிள்ளைகளுடன் இருக்கிறார். அவர் நாள்வீதம் நாற்பது மைல் நடக்கிறார். கண்பார்வை கூர்மையா யிருக்கிறதாம்.

—" இந்து சாதனம் "

## திருடனைப் பிடிக்கும் கருவி

அமெரிக்காவில் திருடனைப் பிடிக்கும் புகைப்படக் கருவி ஒன்று புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டுளது. பத்திரமாக இருக்க வேண்டிய அலமாரி அல்லது பெட்டியுடன் ஒரு கம்பியினால் பிணைத்து அக்கருவியைப் பெட்டியின் சாயல் விழக் கூடிய இடத்தில் மறைவாக வைத்துவிடுவார்களாம். திருடன் பெட்டியைத் தொட்ட உடனே ஒரு வெளிச்சம் உண்டாகிப் படக் கருவியில் உள்ள பிளேட்டில் தாக்கும். உடனே திருடனின் படம் அதில் விழுந்து விடுவதுடன் ஓர் எச்சரிக்கை மணி அடிக்குமாம். திருடன் தப்பிப் போய் விட்டாலும் புகைப் படத்தைக் கொண்டு அவனைப் பிடித்து விடலாமாம்.

" நவசக்தி "

## தஞ்சையில் நல்லதங்காள்

### வறுமையின் கொடுமை

தஞ்சை, ஆகஸ்டு, 1—

தஞ்சை ராஜ குடும்பத்தைச் சேர்ந்த சந்தானராம சாஹிப் என்பவரின் மனைவி கஜ்ராபி என்னும் மாது தன்னுடைய 8, 5, 6, வயதுள்ள மூன்று குழந்தைகளைத் தம் வீட்டுக் கிணற்றில் எறிந்து விட்டுத் தாமும் கத்திகொண்டு தற்கொலை புரிய எத்தனித்துக் கொண்டிருந்தார். குழந்தைகளின் அழுகை சத்தத்தைக்கேட்டு அக்கம் பக்கத்தார் கதவை முறித்துத் தள்ளி உள்ளே புகுந்தார்கள். மூன்று குழந்தைகளையும் கிணற்றிலிருந்து எடுத்தனர். இரண்டு இறந்துவிட்டன. 5 வயது குழந்தை மட்டும் ஆஸ்பத்திரியில் உயிருடன் இருக்கிறது. தாயைக் கைதுசெய்தனர். அவர் தம் வாக்கு மூலத்தில் வறுமையின் கொடுமையால் இவ்வாறு செய்ததாகக் கூறினார். போலீசார் விசாரித்து வருகின்றனர். " தமிழ் நாடு "

## அறிவிப்பு

**அன்பர்களில் அநேகர் இன்னும் தங்களின் சந்தாத் தொகையைச் செலுத்தாது இருக்கிறார்கள். அன்னோர்கள் இதைக் கண்ணுற்றவுடனே தயவுசெய்து தாமத மின்றி அனுப்பி வைப்பார்களாக.**

# பதி பசு உண்மை

[காழி. சிவ. கண்ணுசாமி, B. A.]

கோடி, வெள்ளம், சங்கம் என்றதற்கு மேலும் முற்றுப்பெறா எண்கள் உள்ளன என்பதை யான் அறிவேனன்றோ? அவ்வாறே கடவுள் என்றும் உயிர் என்றும் இருபொருள் உள்ளன வென்பதை யான் உணர்ந்திருக்கிறேன். அவை இத்தன்மைய வென்றோ இவ்வண்ணத்த வென்றோ பிறர் இயைத்துக் கூறுங் கூற்றுக்களால் உணர்ந்தேனெனக் கொள்ளல் வேண்டா; அவ்வாறு வரையறுத்து இயைத்துக் கூற முயல்வதெல்லாம் உண்மை அறிவைச் சிதைப்பன வாகும். முற் கூறியவாறு அறுதியிட்டுக் கூறவொண்ணா முற்றுப் பெறாத எண்கள் உள்ளன என்பதை எவ்வாறு யான் உறுதியாக அறிவேனோ அவ்வாறே என்னைப் படைத்த இறைவன் ஒருவன் உளன் என்பதையும் என்னுளமைந்து கிடப்பதோர் உயிர் ஒன்றுள தென்பதையுந் திண்ணமாய் உணர்ந் திருக்கிறேன். இவ்வுண்மை குறித்து ஒரு சிறிதும் ஐயுறுகில்லேன். என்னை? இதுவே இயற்கையானமைந்து கிடப்பதும், எளிதில் மறுக்கொணாததும், பெரும்பான்மையோரால் ஒப்புக் கொள்ளப் பட்டதுமானதோர் உண்மையாமாகலின்.

ஒன்றுடன் ஒன்றைக் கூட்டி மேற் செல்லும் முறையானே முற்றுப்பெறா எண்கள் உள்ளன என்பதை யுணர்ந்தேன். கடவுள் ஒருவர் உளர் என்ற உண்மையை "நான் எங்கிருந்து வந்தேன்?" என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டே போகும் முறையால் உணர்கிறேன். உயிர் ஒன்று உளதென்பதையோ "நான் யார்?" என்று கேட்டுச் செல்லும் முறையா லுணர்கிறேன்.

விரித்துக் கூறின், ஒன்று என்னும் எண்ணுடன் ஒன்று ஒன்றாகப் பல எண்களைப் பன்முறை கூட்டிக் கொண்டே செல்வதாலோ அன்றி நீண்டதோர் கொம்பை யெடுத்து ஒன்று பலவாகச் சிறு சிறு துண்டுகளாக ஒடித்துக் கொண்டே செல்வதாலோ, உறுதியாக இதுதான் இறுதி என்றறிய முடியாது என்பதை யுணர்கிறேன். இதனால் முற்றுப்பெறா எண்கள் உள்ளன எனத் துணியலாமன்றே?

என் அன்னை வயிற்றில் யான் பிறந்தேன்; என் பாட்டி வயிற்றில் அவள் பிறந்தாள்; என் பெரிய பார்ட்டியின் வயிற்றில் என் பாட்டி பிறந்தாள். இவ்வாறே நோக்கின் முதற்கண் தோன்றியிருக்கவேண்டிய பாட்டி, யார் வயிற்றில் பிறந்திருப்பாள் என்ற கேள்வி யெழுகின்றது. அதற்கு விடையாகக் கடவுள் என்ற ஒருவரிடத்துத் தானென முடிவு கட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

நான் யார்? என் கால்களா நான் என்பது? அன்றி என் கைகளா? தலையா? உணர்வா? உள்ளமா? இவற்றில் எதுவும் இல்லையானால் மற்று நான் என்பது தான் யார்? நான் என்பது நான் தான்; அதாவது என்னுள் ளமைந்திருக்கும் உயிர்.

எவ்வழி முயன்று பார்க்கினும் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதை எளிதி லுணர்கிறேன். என்னுடைய உருவும், ஊனும், உள்ளமும், உள்ளத்தினுள்ளே நின்ற கருவும் அவனே. என் அன்பும் அவனே. அவ்வன்பின் உருவும் அவனே. அஃதாயின் யான் காணும் ஒவ்வொன்றினுக்கும் மூலமாவான் அவனேயன்றோ?

அஃதொக்கு மெனின் ஒவ்வொன்றின் உண்மையையும் அறிய முயல்வதும் எவ்வுயிர் மாட்டும் அன்பு பூண்டு நடக்கச் செய்வதும், என் உயிரேயன்றோ?

—லியோ டால்ஸ்டாய்.

# சிவமணிகள்

[சுவாமி ராமசுவாமி திரட்டியது]

சூரிய உதயத்தால் இருள் ஒழிந்தாற் போலச் சிவ தரிசனத்தால் பாவங்கள் யாவும் ஒழியும்.

⁂

சிவநாமங்களை உச்சரிப்பவனிடத்திற் பாவங்களெல்லாம், நெருப்பில் வீழ்ந்த சருகு போல் அழியும்.

⁂

சிவத்தை விட இரண்டாவது பொருள் கிடையாது. இரண்டாவது ஒரு பொருள் இருக்குமென நினைத்தல் அஞ்ஞானமே யன்றி ஞானமாகாது.

⁂

எல்லாப் பிறவிகளிலும் தரித்திரனாக விருப்போன் சிவபெருமானைச் சேவித்தால் அவன் உடனே அஷ்ட லட்சுமியை அடைவான்.

⁂

"விஷ்ணுவே! பிரமனும் நீயும் உருத்திரனும் எம்முடைய வடிவமே யன்றி வேறன்று. அப்படி யன்றிப் பேதமாக நினைப்போர் எம்மைத் தரிசிக்க மாட்டார்கள்."

⁂

சிவமென்னும் மங்களமான பெயர் எவன் முகத்தில் நிரந்தரமாக இருக்கின்றதோ அவனது தரிசனத்தினாலே அந்நியர்களும் பரிசுத்தர்களாகிறார்கள்.

⁂

ஒரு விதையிலிருந்து மரம் தோன்றி நானா விதமான கிளை இலை முதலானவை உண்டாவது போலச் சிவபெருமானிடத்திலிருந்து பிரபஞ்சங்களெல்லாம் தோன்றுகின்றன.

பாபிகளாயினும் சிவபூஜை செய்வார்களாயின் தாமரை யிலையைத் தண்ணீர் அடையாதது போல அவர்களைப் பாபங்கள் அடைய மாட்டா.

⁂

எந்தக் காலத்தில் சிவத்யானம் செய்யாம லிருந்தோமோ அந்தக் காலமே நமக்கு இடையூறு வருங்காலம்.

⁂

தியான யோகத்தி லிருப்பவனுக்குச் சிவபெருமான் எப்பொழுதும் சமீபத்திலேயே யிருப்பார்.

⁂

உலகத்தில் சத்தியம் ஒன்றே எல்லாவற்றிற்கும் சாதனமானது. சத்தியத்தைப் பேசுகிறவனுக்கு இவ்வுலகத்திலும் மோக்ஷ உலகத்திலும் துர்பலமானது ஒன்று மில்லை.

⁂

துக்கமடைந்த காலத்தில் எவன் நிர்மல புத்தியுடையவனா யிருப்பானோ அவன் துக்கங்கள் சூரியனைக் கண்ட இருள் பேரல் நீங்கும்.

⁂

திருநீறணியாத நெற்றியும் உருத்திராக்ஷ மில்லாத கழுத்தும் சிவநாமம் புகலாத வாயுமுடையவனைக் கண்டால் சண்டாளனைக் கண்டாற்போல விலகிச் செல்ல வேண்டும்.

⁂

உலகத்திற் காணப்படுவதும் சொல்லப்படுவதும் நினைக்கப்படுவதும் ஆகிய எல்லாம் சிவரூபமே தவிர வேறொன்று சிறிது மில்லை.

187123

## சைவ சித்தாந்த மஹா சமாஜம்—சென்னை.

### 1927ஞ டிசம்பர்மீ 1உ முதல் 1928ஞ ஜூலைமீ 31உ முடிய வரவு செலவு.

| விவரம் | வரவு ரூ. | அ. | பை. | விவரம் | செலவு ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| "சித்தாந்தம்" சந்தா வசூல் ... | 730 | 2 | 0 | கணக்கு புஸ்தகம் பேனா பென்சல் முதலியன ... | 8 | 5 | 6 |
| வருடாந்தர ஈட்டிற்கு நன்கொடை ... | 35 | 0 | 0 | வருடாந்தர மீட்டிங்கிற்கு அறிக்கை, விளம்பரம் ... | 73 | 8 | 0 |
| சித்தாந்தம் அச்சிட நன்கொடை :— | | | | மீட்டிங் நோட்டீஸ், பிரவேச விண்ணப்பம் அச்சுக்கூலி | 5 | 0 | 0 |
| ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் 80 0 0 | | | | "சித்தாந்தம்" அச்சுக்கூலி, காகிதம் உள்பட ... | 363 | 4 | 0 |
| திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் 58 12 0 | | | | பிளாக்குகள் & ரப்பர் ஸ்டாம்புகள் ... | 12 | 8 | 0 |
| ,, S. கனகசபாபதி பிள்ளை 58 12 0 | | | | சில்லறைச் செலவு ... | 10 | 7 | 9 |
| ,, A. சோமசுந்தரம் செட்டியார் 58 12 0 | | | | தபால் செலவு ... | 148 | 9 | 6 |
| ,, M. C. சோமசுந்தர முதலியார் 58 12 0 | | | | வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ... | 610 | 0 | 0 |
| ,, P. தானப்ப முதலியார் 25 0 0 | | | | தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ... | 70 | 14 | 0 |
| ,, P. நடராஜ முதலியார் 25 0 0 | 365 | 0 | 0 | | | | |
| வி. பி. தபால் வரவு ... | 24 | 11 | 0 | | | | |
| சந்தா முன்பணம் ... | 3 | 8 | 0 | | | | |
| வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ... | 30 | 0 | 0 | | | | |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ... | 57 | 0 | 0 | | | | |
| விளம்பர சார்ஜ் ... | 6 | 0 | 0 | | | | |
| மொத்தம் ... | 1251 | 5 | 0 | மொத்தம் ... | 1302 | 8 | 9 |
| ஆரம்ப இருப்பு ... | 74 | 8 | 6 | முடிவு கையிருப்பு ... | 23 | 4 | 9 |
| | 1325 | 13 | 6 | | 1325 | 13 | 6 |

### சமாஜத்தின் பொருள் வலிவு

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கத்தில் | ரூ. | 580 | 0 | 0 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் | ,, | 13 | 14 | 0 |
| கையிருப்பு | ,, | 23 | 4 | 9 |
| மொத்தம் | ,, | 617 | 2 | 9 |

தி. க. சுந்தரம் பிள்ளை, காரியதரிசி.

C. இரத்தின முதலியார், பொருட் காப்பாளர்.

வே. மாணிக்க முதலியார், கணித பரிசோதகர்.

இந்தியாவில் சிறந்தது என்று அநுபவசாலிகளால் மதிக்கப்படும்

## ருக்மணி குக்கர்

என்னும் சமையல் அடுக்கு உங்கள் வீட்டில் இருக்கிறதா? இல்லாவிட்டால் இன்றே ஒன்றைத் தருவியுங்கள்.

இதனால் ஒருமணி நேரத்தில் சாதத்துடன் பல பதார்த்தங்களை நீராவியினால், சிரமமில்லாமலும், சமையற்காரனுடைய உதவியில்லாமலும், மிகக் குறைந்த செலவில் தயார்செய்யக்கூடும்.

கனம் எட்டியாபுரம் ராஜா அவர்கள் எழுதுகிறார் :—மற்ற குக்கர்களைவிட ருக்மணி குக்கரே பூரண திருப்தியைக் கொடுக்கிறதென உறுதியாய்ச் சொல்லுகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் அதிக சத்துள்ளதாயும், தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதாயும் இருப்பதோடு, மற்ற குக்கர்களில் காணப்படும் துர்வாசனை இல்லாததாயும் இருக்கிறது.

ஸ்ரீமான் டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்கள் எழுதுகிறார்:–நான் தங்கள் குக்கரை என்னுடைய வீட்டில் தினந்தோறும் சமையல் செய்வதற்கு உபயோகப்படுத்தி வருகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் மிகவும் நேர்த்தியான ருசியை அடைகிறது.

1, 2, 4, 6, 8 பேர்களுக்குத் தகுதியான குக்கர்கள் முறையே
13, 18, 22, 27, 33 ரூபா விலை.

ஒன்று இன்றே தருவியுங்கள். விவர புஸ்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.

1-7-28.
31-12-28.

ருக்மணி குக்கர் கம்பனி,
இராயபுரம், (11) மதராஸ்.

சிறந்த கட்டுரைகள்! ஏராளமான படங்கள்!

பொதுஜன நன்மையை நாடி இடைவிடாது உழைத்துத் தமிழர் உள்ளத்தில் தேசிய உணர்ச்சியை எழுப்பிவரும் சிறந்த தேசீய பத்திரிகை.

## "தமிழ் நாடு"

ஒன்றே.

ஒவ்வோர் இதழிலும் அழகு, வீரம், அன்பு, சத்தியம், ஹாஸ்யம், தேசாபிமானம், சமூக சீர்திருத்தம் முதலியவைகள் இனிய செந்தமிழ் நடையில் மிளிர்கின்றன.

பல அறிவாளிகள் எழுதிய கட்டுரைகளும், ஏராளமான படங்களும், வேடிக்கைப் படங்களும் வெளி வருகின்றன.

அறிவை வளர்க்க விரும்பினால் இன்றே

"தமிழ் நாடு" (வாரப்பதிப்பு)

சந்தாதாரராகுங்கள்.

சந்தா விவரம் — தினப் பதிப்பு

| | உள் நாடு | வெளி நாடு | தினப் பதிப்பு |
|---|---|---|---|
| 1-வருஷம் | ரூ. 5 0 0 | ரூ. 6 0 0 | ரூ. 20 0 0 |
| 6-மாதம் | ரூ. 3 0 0 | ரூ. 3 8 0 | ரூ. 10 0 0 |
| 3-மாதம் | ரூ. 1 14 0 | ரூ. 2 0 0 | ரூ. 5 0 0 |
| Ex. | | 1-மாதம் | ரூ. 1 12 0 |

மானேஜர் :—"தமிழ் நாடு," சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Edited and Published by Mani. Thirunavukkarasu Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

“ஆநந்த குணபோதினி”

ஆடி மாதமுதல் ஆங்கில மாத சஞ்சிகைகளை யொப்ப நவீன நாகரிக உருவுடன்

# அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு] வெளிவருகின்றது. [3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S. G. இராமாநுஜலு நாயுடு

அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகையொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜக விநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமா யிருப்பது எது? எங்கள் “அமிர்த குணபோதினி”யே. 56-பக்கங்களுடனும் ஒரே ரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப்பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாதப் பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாயொன்றே வெளிநாடு ரூ. 1—4—0. மாதிரி காப்பி இனாம்!

1-9-28.
28-2-29.

டி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

---

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் அன்பர்களே! ஏன் கவலைப் படுகிறீர்கள்?

உபாத்தியாயர் இல்லாமல்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

2,50,000 ஜனங்களால் வாசித்துப் பிரபல்யமடைந்த

# ஆங்கில ஆசான்

அல்லது

# ஆங்கில போதினி




தமிழ் எழுத்துக்களை வாசித்தால்

இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 9-ம் பதிப்பு 800 பக்கம்கொண்ட ஒரு பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இவ் வெட்டாம் பதிப்பில் 1½ ரூபாயிலிருந்து 3000 ரூபா வரையில் மிக சிரமப்பட்டு மாதச் சம்பளக் கணக்கு போடப்பட் டிருக்கிறது.

முழு கலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

போலி புத்தகங்களால் ஏமாறவேண்டாம்.

1-9-28.
28-2-29.

டி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302, தங்கசாலை தெரு, சென்னை.

# சித்தாந்தம்

## ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பிலே திங்கடோறும் வெளிவரும் உயர்ந்த தத்துவப் பத்திரிகை. சைவ சித்தாந்தத்தின் உண்மை நிலையை உணர்த்து முகத்தான் பல சமயக் கொள்கைகளையும் எடுத்துரைப்பது. செந்தமிழ் நடையிலே தெளிவாக எழுதப்படும் பல இனிய அரிய கட்டுரைகளை உடையது. ஆங்கிலமொழி பெயர்ப்பான அழகிய கட்டுரைகளையும் ஆங்காங்குக் கொண்டு மிளிர்வது. தமிழறிவைப் பெறுவதற்கும் சைவ உண்மைகளை உணர்வதற்கும் ஒரு பெருந் துணையாயது.

### சந்தா விவரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுட்பட | உள் நாடு (இந்தியா, பர்மா, சிலோன்).... | ரூ. | 1 | 8 | 0 |
| | வெளி நாடு .... .... | ,, | 2 | 0 | 0 |

குறிப்பு :—ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) பத்திரிகை ஆங்கில மாதம் 10-ந்தேதி வெளிவரும்.

(2) சந்தாத் தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி. பி. யில் செலுத்தியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். வி. பி. யில் பத்திரிகை பெறுபவர்கள் அணா இரண்டு ரிஜிஸ்டிரேஷனுக்காகத் தனியே செலுத்தவேண்டி யிருப்பதால் மணியார்டர் மூலம் பணம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளுதல் நலம்.

(3) கடிதம் எழுதும் பொழுதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

(4) ஆண்டினிடையில் சேருகிறவர்கட்கு முன் பத்திரிகைகள் கூடிய வரை அனுப்பப்படும்.

(5) பத்திரிகை சேராதவர்கள் அவ்வம்மாதம் 20-ந் தேதிக்குள் எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித் தவறினவர்கள் பத்திரிகையின் கிரயம் அணா $2\frac{1}{2}$ அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(6) இடம் மாறுபவர்கள் அடுத்த பத்திரிகை தங்களுக்கு வந்து சேரும் வண்ணம், தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு, புது விலாசத்தை நமக்கு உடனே அறிவித்தல் வேண்டும்.

(7) வியாச மெழுதுபவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி அனுப்ப வேண்டும். ராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை முதலியவைகளும் சைவ சித்தாந்தத்திற்குப் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்குப் பூரண உரிமை யுண்டு.

(8) வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

(9) சந்தாதாரர்களும், கட்டுரையாளர்களும் பதில் விரும்பின் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பி வைத்தல் வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (10) விளம்பர விகிதம் | முழுப் பக்கம் | ரூ. | 10 | 0 | 0 |
| | அரைப் பக்கம் | ,, | 5 | 0 | 0 |
| | கால் பக்கம் | ,, | 3 | 0 | 0 |

(1... ...குக் கீழ்வரும் விலாசத்திற்கு எழுதவும்.

சித்தாந்தம் ஆபீஸ்,
திருப்பள்ளி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.